உ

சிவமயம்

# அருள் ஒளி



மலர் 16

கார்த்திகைத்தீபச் சிறப்பு மலர்

கார்த்திகை மாத இதழ்

வெளியீடு


ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை

இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
**திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்**

உதவி ஆசிரியர்:
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2003 சுபானு வருடம் கார்த்திகை மாதம்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை.

மலர் **16**


## பாடத்திட்டத்தில் ஆன்மீகக் கல்வி

உலகம் அமைதியின்றித் தவிக்கிறது. மனிதமனங்களில் தோன்றிய மமதை அமைதியைக் குலைத்து விட்டது. செல்வம் நிறைந்த அமெரிக்க தேசத்திலும் அச்சம் புகுந்து விட்டது. வறுமை மிகுந்த வங்களாதேசத்திலும் இயற்கையின் அச்சம் மக்களை அஞ்ச வைக்கிறது. உலகுக்கு ஆன்மீகச் செய்தி சொன்ன பாரததேசத்திலும் பயங்கரவாதம் என்ற வார்த்தை தினமும் உச்சரிக்கப்படுகிறது. மூன்றாம் உலகயுத்தம் மூண்டாலும் ஆச்சரியமில்லை என்று பத்திரிகையாளர் வல்லரசுகளின் நடவடிக்கைகளைக் கண்டு ஆருடம் கூறுகிறார்கள். எங்கள் இனிய பூமியாகிய ஈழநாட்டிலும் நிரந்தரவிடிவின்றித் தொடரும் அமைதியின்மை என் செய்வோம்? எங்குதான் அமைதியான வாழ்வு அமைதியில்லாத உலகத்திலே மன அழுத்தங்களால் அவலப்படுபவர்கள் ஏராளம். உலகம் அமைதியின்றித்தவிப்பதற்கு அடிப்படைக்காரணம் இறைநம்பிக்கை வற்றியதே என்ற ஆன்மீகப் பெரியவர்களின் கூற்று மிகவும் உண்மையானது. தெய்வ நம்பிக்கை வலுப்பெறுகின்ற போதெல்லாம் மனித மனம் பக்குவமடையும். எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்ற இனிய பண்பு இதயத்தில் வளரும். தெய்வ நம்பிக்கைகளை மக்களிடையே சீராக வளர்க்கத்தவறியதனால் உலகம் அச்ச வாழ்வில் அல்லலுறுகிறது. மேலை நாடுகளில் நவயுகம் காண்போம் எனப்புறப்பட்ட ஆட்சியாளர்கள் கல்வித்திட்டத்தில் சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடத்தை விலக்கினர். ஆன்மீக போதனையை விலக்கி அறிவியல் மட்டுமே போதித்தனர். அறிவியல் வளர்ந்தது உண்மை தான். ஆன்மீகம் வளராததால் அறிவியலால் ஆறுதலைச் சந்திக்க முடியவில்லை.

இன்று உலகிலேயே கடிகாரத்தை விட வேகமாக உற்பத்தியில் ஈடுபடும் நாடு யப்பான். ஆனால் யப்பான் நாட்டின் அதிசயத் தரவு ஒன்று அந்நாட்டின் துயரை எடுத்துரைக்கிறது. அதாவது உலகத்திலேயே தற்கொலை செய்பவர்களின் விகிதத்தில் முன்நிலையில் நிற்கும் நாடு யப்பான் என்ற செய்தி எவ்வளவு வேதனைக்குரியது. உலகுக்கே ஆன்மீகம் போதித்த பாரததேசத்திலும் பாடத்திட்டத்தில் சமயக்கல்வி நீக்கப்பட்டது. பாரத தேசம் அதன் பலனை அனுபவிக்கிறது.

உலகில் அமைதியின்மை வலுப்பெறுவதாக உளவியல் அறிஞர்கள் புதிய புதிய கல்வித்திட்டங்களை உருவாக்க முனைகிறார்கள். "உளஆலோசனை" என்ற பயிற்சி பாலர் முதல் முதியோர் வரை பல நிலையில் வழங்குகிறார்கள். எனினும் உலகை அமைதிப்படுத்த முடியவில்லை. உலகம் உண்மையான அமைதி காண வேண்டுமானால் ஆன்மீகக் கல்வி சகலநிலையிலும் போதிக்கப்பட வேண்டும். ஆன்மீகக் கல்வி இல்லாத உலகம் அமைதியைச் சந்திக்காது. எனவே எல்லா நாட்டிலும் எல்லா மதத்தவர்களும் மனிதனைப் பக்குவப்படுத்தும் உண்மையான ஆன்மீகக் கல்வியைப் புகட்ட முன்வருவது காலத்தின் கட்டாய கடனாகும். எனவே ஆன்மீகக் கல்வியைப்பெற முயல்வோமாக.

- ஆசிரியர்

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சிவன், ஐயனார், அம்மன், இராஜ கோபுர மகா கும்பாபிஷேகம் **08-12-2003** திங்கட்கிழமை அன்று நடைபெற திருவருள் கைகூடியுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயம் அறத்தின் வழியது

– கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

சமயம், நம் மனங்களைச் செம்மைப்படுத்துகின்றது. மனமது செம்மையானால், மனிதன் செம்மையாகிவிடுவான். அவனது எண்ணங்கள், பேச்சுகள், செய்காரியங்கள், யாவுமே செம்மையானவையாகி விடும். சமயத்தை தவிர, வேறு எந்தச் சக்திக்கும், மனித மனங்களைச் செம்மையாக்கி அச் செயன்முறையினூடாக மனிதர்களை செம்மையாக்கும் வல்லமைகள் கிடையாது என்பதை கடந்தகால அனுபவங்கள் காட்டுகின்றன. சமயந் தான் தொடக்கத்திலிருந்து மனிதனை மனிதனாக்கும் அற்புதப் பணியைச் செய்து வந்தது, செய்தும் வருகிறது. இடைக்காலங்களில் விஞ்ஞானம் என்றும், பகுத்தறிவு வாதம் என்றும், நாஸ்திகம் என்றும் பல்வேறு விசைகள் தோன்றி, மனிதர்களைச் சமயத்தினின்றும் பிரித்து எடுக்க முயன்றன. உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன் என்றொரு பழமொழி உள்ளது. அது போல, மனிதர்களில் இருந்து வந்த கொஞ்ச நஞ்ச நிம்மதி, அமைதி, மற்றும் நற்குணங்கள், நற்செய்கைகள் கூட மனிதரை விலகி, வெகுதூரம் சென்று கொண்டிருக்கின்றன. இன்று மனிதர்கள் சமய நம்பிக்கையை, இறை நம்பிக்கையை, சமய ஒழுக்கங்களை, சமய ஆசாரங்களை கைவிட்டு வருகின் றமையினாலேயே மனித மனங்கள் பழுது அடைந்த நிலையில், மனிதாபிமானமற்ற வர்களாக, மனிதத்தன்மைகள் நீக்கப்பெற்றவர்களாக உள்ளனர்.

பால், சோறு முதலியன எம்மை வாழ்விக்கும் சத்து நிறைந்த உணவுகள் தான். ஆனால் அவை கெட்டுவிட்டால், நஞ்சாகி விடுகின்றன. பழுதாகிப்போன பாலையோ சோற்றையோ உண்டால், உயிருக்கே ஆபத்தாகி விடும்.

அவ்வாறுதான் மனிதரின் மனங்களும். மனம் உள்ளவன் மனிதன். மனத்தால் வாழ்பவன் மனிதன். மனம்போல வாழ்கின்றவன் மனிதன். மனம் நல்லதாக விளங்கினால், வாழ்வும் நல்லதாக அமையும். மாறாக மனம் கெட்டதாக விளங்கினால், வாழ்வும் கெடுதல்கள் நிறைந்ததாகவே அமையும். இது சமயம் கண்டுபிடித்த உண்மை.

எம்முடைய மனங்களை நாம் என்ன நிலையில் வைத்திருக்கின்றோமோ, அதற்கேற்றவாறு, எம்முடைய வாழ்வில் இன்பமோ, துன்பமோ அமைகின்றது.

கேடுகள், கெடுதிகள்; இன்பங்கள், மகிழ்ச்சிகள் என்பன விண்ணிலிருந்தும் மண்ணிலிருந்தும் தோற்றுவிக்கப்படுவதில்லை. அவை யாவும் மனிதர்களின் மனங் களிலிருந்தே சிருட்டிக்கப்படுகின்றன. எமது சமயம் இவ்வாறு தான் கூறுகிறது அது முழுதும் உண்மை.

பொறாமை, பேராசை, சுயநலம், சினம், என்பன மனித மனங்களில் படிந்து விடுகின்ற மாசுகள். இவை கேடுகளை நன்கு போஷித்து வளர்க்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம் என்பதற்கு வரைவிலக்கணம் கூறும் வள்ளுவப் பெருந்தகை,

"மனத்துக் கண் மாசு இலன் ஆதல், அனைத்து அறன்"
என்கிறார்.

ஒவ்வொரு மனிதனும் அறம் செய்ய வேண்டும் என்ற கருத்துப்பட, "அறஞ்செய விரும்பு" என்று சொல்லிப் பாடத்தை ஆரம்பிக்கிறார், ஔவைப் பிராட்டியார்.

அறஞ்செய்வது என்றால், அது என்ன இலேசுப்பட்ட காரியமா? பணம், பண்டம், வேண்டும், இடம், பொருள், ஏவல் வேண்டும். ஆள், அடுக்குகள் எல்லாம் வேண்டுமே, என்று நினைப்பவர்கள் தான் எம்மில் பலர். ஆனால் உண்மை அதுவல்ல. ஒருவரால் செய்யமுடியாத ஒன்றைச் செய்யும்படி ஒருபோதும் பெரியவர்கள் வற்புறுத்த மாட்டார்கள். "அறஞ்செய விரும்பு" என்று ஔவையார் சொல்கிறார் என்றால், எல்லோராலும் அறம் செய்ய முடியும் என்று அவர் எண்ணியுள்ளார் என்பது தான் அர்த்தம். ஆம், அறஞ் செய் வதற்கு மனம் இருந்தால் போதும், வேறு எதுவும் தேவையில்லை. மனம், மனிதர்கள் எல்லோரிடமும் உண்டு என்பதில் சந்தேகமேயில்லை. அந்த மனத்தை அறஞ்செய்ய விரும்பும் மனமாக அமையச் செய்வதே, மனிதன் செய்ய வேண்டியது. இது ஒவ்வொருவருக்கும் இயலக்கூடிய காரியம். அதற்கு, சமயத்தின் துணையை நாடவேண்டும். அது எங்களால் இயலவில்லை என்றால், அதனை வெறும் நடிப்பு, பாசாங்கு, என்று தான் கூறவேண்டும்.

மனத்திலுள்ள மாசுக்களான, பொறாமை, பேராசை, வெகுளி, இன்னாச்சொல், அகந்தை, மமதை என்பவற்றை நீக்கி விட்டால் போதும், அச்செய்கையே அறம் ஆகிவிடும். எனவே அறம் செய்வதற்குப் பணம் தேவையில்லை, நல்ல மனந்தான் தேவை. இப்பொழுது, பணம் இருந்து விட்டால் பணத்தினால் அறங்கள் பலவற்றைப் புரிவது இலகுபோல் தெரிகிறது. மனத்தினால் அறம் செய்வது கஷ்டம் போல் தோன்றுகிறது இல்லையா? இலகுவாகச் செய்து முடிக்கும் காரியத்திலும் பார்க்க, கடினமான காரியத்தில் ஈடுபட்டுச் செய்து முடித்தலே மனிதர்க்குப் பெருமை தரக்கூடிய விஷயமாகும். எனவே, மனத்திலுள்ள அழுக்காறு, அவா, வெகுளி, அகந்தை, மமதை என்பவற்றை அகற்றுதலான அறத்தைச் செய்து ஆனந்தம் பெறுவோம். அதற்கு இறைவனின் திருவருள் வேண்டும் என்பதை நினைவிற் கொள்வோம். இறைவனின் திருவருளைப் பெற்றே, மனங்களை அறத்தின் பால் செலுத்த முடியும். இறைவனைச் சிந்தித்தல், தியானித்தல், நேசித்தல், பூசித்தல், போற்றுதல், துதித்தல், அவனுடன் ஒன்றித்தல் மூலமே இறைவனின் திருவருளைப் பெற முடியும்.

> மனிதர்களாகிய நாம் மிருக வலிமையுடன் பிறந்துள்ளோம். ஆனால் இருதயத்தில் குடிகொண்டுள்ள கடவுளை அறிவதற்காக மனிதராய்ப் பிறந்திருக்கின்றோம். அது தான் மனிதனின் விசேஷப் பிறப்பாகும்.
>
> — காந்தியடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் வழிபாடு

## —பண்பாட்டின் உயர்வாக.......

திரு. ஆ. கதிரமலைநாதன் அவர்கள்

இறைவனை மலரைக் கொண்டு வழிபடுதல் என்பதனையுங்கூட ஒரு சமுதாயத்தின் சமயப்பண்பாட்டின் உயர் நிலையில் ஒரு அறிகுறியாகக் கொள்ள முடியும் என்பர் தற்கால ஆய்வாளர்கள் சிலர்.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே தீமூட்டி வளர்த்து, மிருக பலியிட்டு, படையலிட்டு ஆரவாரமான சடங்குகளுடன் இறைவழிபாடு செய்த ஆரியரிலிருந்தும் பெரிதும் வேறுபட்டு – அவனுக்கெனத் தனி இருப்பிடம் அமைத்து, எவ்வித ஆரவாரமுமில்லாது மலரைக் கொண்டு வழிபாடு செய்தனர் திராவிடர்.

ஒரு காலத்தில் திராவிடருங்கூட வழிபாட்டில் உயிர்ப் பலியைக் கைக்கொண்டு வந்திருந்தவர்கள்தான். ஏனெனில் சங்க காலப் பாடல்கள் சிலவற்றில் வழிபாட்டின் போது மதுவுண்டு வெறியாட்டயர்தல், உயிர்ப்பலியிடுதல் என்பன குறிப்பிடப்படு வதிலிருந்தும் இவ்வாறு உணர்ந்து கொள்ளக் கிடக்கின்றது.

ஆயின் பண்பாட்டில் முதிர்ச்சியடைந்த போது, உயிர்ப்பலி என்பது பாவகரமானது, இன்னொரு உயிரினைப் பலியிட்டு தனது தேவையினைப் பூர்த்தி செய்ய விரும்புவது மனிதாபிமானமுடையதல்ல என உணர்ந்து கொண்டு இவ் வழக்கத்தைக் குறைத்துக் கொண்டிருக்கலாம்.

எவ்வாறாயினும் இறை வழிபாடு என்பது வெறுமனே வணங்குவதுடன் மட்டும் நின்று விடக்கூடாது. அவ் உயர்ந்த சக்திக்கு நன்றியாக இயற்கையிலேயே சிருஷ்டிக்கப்பட்ட மலர்களையாவது சமர்ப்பித்து வணங்க வேண்டுமென எண்ணி அவ்வாறே கைக்கொள்ள ஆரம்பித்திருக்கலாம்.

“ஆகம நெறி – பூ வழிபாட்டு நெறி திராவிடருடையது; பூவழிபாடு என்பது கோயில் அமைத்துச் செய்வது; வேத நெறி – முத்தீ நெறி ஆரியருடையது; தீ வழிபாடு என்பது முத்தீ வளர்த்துப் பலியிட்டுச் செல்வது” எனவும்,

“பூ என்பதும் தமிழே, பூ சாத்துதல் ‘பூசை’ என்றும், பூசி (மெழுகி) பரவுதல் ‘பூசை’ என்றும் மாறின. அதுவே வடமொழியில் ‘பூஜை’ எனவும் மாறியது” எனவும் ஓர் ஆசிரியர் விளக்கமளித்துள்ளார்.

எவ்வாறு பார்த்தாலும், மலர் வழிபாடு என்பது சமயப் பண்பாட்டு வளர்ச்சியின் உயர் நிலையைக் குறிக்கும் ஒன்றாக ஏற்றுக் கொள்வதிற் தவறே இருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளையாடற் புராணம்

சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திருவாலவாயானது சுந்தரப்பேரம் பெய்தது, சங்கப்பலகை தந்தது. தருமிக்குப் பொற்கிழி அளித்தது. கீரனைக் கரை ஏற்றியது, கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தது. சங்கத்தார் கலகந் தீர்த்தது. இடைக்காடன் பிணக்குத் தீர்த்தது. வலை வீசினது. வாதவூரடிகளுக்கு உபதேசித்தது. நரி பரியாக்கியது. மண் சுமந்தது, பாண்டியன் சுரந் தீர்த்தது, சமணரைக் கழுவேற்றியது, வன்னியுங் கிணறும் இலிங்கமு மழைத்தது, என்னும் இவையே மதுரையில் சோமசுந்தரப் பெருமான் ஆடிய எண் எண் திரு விளையாடல் என்னும் இன்பக் கடல்.

அறுபத்து நான்கு திருவிளையாடல்களில் நாற்பத்துஏழு திருவிளையாடல் குறிப்புக்கள் காணப்படும் பனுவல்கள் பலவுள. அவை தேவாரம், திருவாசகம், சிலப்பதிகாரம், கல்லாடம் என்பனவாகும்.

பரஞ்சோதி முனிவருடைய காலம் ஏறத்தாழ இற்றைக்கு முந்நூறு ஆண்டிற்கு முற்பட்டதென்பர்.

கடவுள் வாழ்த்து என்னும் பகுதியில் பரஞ்சோதி முனிவர், எதற்காகப் பாடினார் என்பதனையும் மூல நூலையும் பகர்கின்றார். புராணங்களை சிவபிரானிடத்து கேட்டுத் தெளிந்தார் திருநந்தி தேவர். நந்தியடிகளிடம் சனற்குமார முனிவர் கேட்டறிந்தார். சனற்குமாரர் வியாச முனிவருக்கு விளம்பினார். வியாசர் சூத முனிவருக்குப் பதினெண் புராணங்களை ஓதினார்.

பதினெண் புராணங்களுள் காந்த மகா புராணம் ஒன்று. காந்தபுராண சங்கிதைகளில் சங்கர சங்கிதையும் ஒன்று. சங்கர சங்கிதையில் ஆலவாயின் பெருமை பாடப்பெறும், வடநூலில் கூறப்பெற்ற ஆலவாய்ப் புகழ்மையை தென் சொல்லால் செய்து தரும்படி மதுரை வாழ் பெரியோர்கள் பணித்தார்கள். அப்பணிப்பிற்கு இசைந்தார் பரஞ்சோதி முனிவர். அதனால் தலவிசேடம், தீர்த்த விசேடம், மூர்த்தி விசேடம் என்னும் மூன்றுடன் திருவிளையாடல்கள் அறுபத்துநான்கும் அருச்சனை ஒன்றுமாக அறுபத்தெட்டினையும் விரிந்த முறையில் விருத்தச் செய்யுளால் விளம்பலுற்றேன் எனப் புராண ஆசிரியர் புகலுவார்.

பொதிய மலையை இருக்கையாகக் கொண்ட அகத்திய முனிவருக்கு முருகப் பெருமான் இந்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் அருளிச்செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உமையம்மையாருக்குச் சிவபெருமான் சங்கர சங்கிதையை அருளிச் செய்தார். தாரகன் உடலை இருகூறுபடச் சிவந்த திருக்கரத்து வீற்றிருந்த வேற்படையை ஏவினார் வெற்றிவேற் பெருமான். சங்கர சங்கிதையை எனக்கு முருகக் கடவுள் எனக்குத் திருவாய் மலர்ந்தருளினார்.

"கிரவுஞ்ச மலையின் மார்பு கிழிய வேல் விடுத்தார் வித்தக சொரூபரான செவ்வேற் பெருமான். அவர் எனக்கு விளம்பிய வண்ணம் உங்களுக்கு விளம்புவேன். இவ்வாறு கடல்நீர் முற்றும் வற்றப் பருகிய குறுமுனிவர் முனிவர்கள் யாவரும் கேட்க மொழிந்தார் என்று புராண வரலாற்றில் பேசப்படுவதனாலும், அதே போல வன்னியுங் கிணறும் இலிங்கமு மழைத்த படலத்தில் வசிட்டாதி முனிவர்களுக்கு அகத்திய முனிவர் அருளிச் செய்கின்றார்.

"எம் குருநாதனாகிய முருகப்பெருமான் உபதேசித்தருளியவாறு அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் உங்களுக்கு உரைத்தேன்-" **"எங்குரு நாத சாமி சொன்னவா நுங்கட் கெண்ணெண் காதையுஞ் சொன்னே னம்ம-"** என்று கூறுவதால் தமிழ்ச்சங்கத் தலைமைப் புலவரான குன்றம் எறிந்த குமரவேளுக்கும் திருவிளையாடற் புராணத்திற்கும் நெருங்கிய உறவு இருத்தல் நன்கு புலனாகும்.

திருவிளையாடற் புராணத்தைப் பாடியவர் பரஞ்சோதியார். பெரிய புராணத்தைப் பாடியவர் அருண்மொழித்தேவர். கந்தபுராணத்தை இயற்றியவர் கச்சியப்பசிவாச்சாரியார். திருவாதவூரடிகள் புராணத்தைச் செய்தவர் கடவுள்மாமுனிவர். அதே போலத் திருவிளையாடற் புராணத்தை இயற்றியவர் பரஞ்சோதி என்ற அளவோடு பெயர் அமையாமல் பரஞ்சோதி முனிவர் என்று போற்றப்படுவார். தவ ஒழுக்கத்தில் சிறந்து முனிவராகத் திகழ்ந்திருப்பார் என்பதற்கு ஐயப்பாடு இன்றித் திருவிளையாடற் புராணப் பாடல்கள் சான்று பகர்கின்றன.

செய்யுள் என்னும் பெயர்ப்பொருள் விளங்குமாறு பாடல்கள் விளங்குகின்றன. அனைத்துத் திருவிளையாடற் புராணப் பாடல்களும் இலக்கணத்திற்கு இலக்கணமாகவும் இலக்கியத்திற்கு இலக்கியமாகவும் தமிழிற்குத் தமிழாகவும் தமிழ்ச்சுவைக்குத் தமிழ்ச்சுவையாகவும் பொருள் அடைவிற்குப் பெட்டகமாகவும் திகழ்வது கற்றோரையும் கற்றுச் சுவைப்போரையும் இறும்பூத எய்துவிப்பன.

உதாரணத்திற்கு ஓரிரு திருப்பாடல்களை எடுத்துக் காட்டுதும்.

ஆலமுற்றத் தமர்ந்திருப்பவர் தென்முகக் கடவுள் தட்சிணாமூர்த்தி என்று அகக் கடவுளை அழைப்பர். அக்கடவுள் வாழ்த்துப் பாடலாகத் தொடங்குவது- "கல்லாரின் புடையமர்ந்து" என்று.

தட்சிணாமூர்த்தியை சிந்தையில் வைத்துத் தியானிப்பதற்கு - உள்ளக்கிழியின் உருவெழுதி அகமுகமாகத் தியானிப்பதற்கு தமிழிலோ அல்லது பிறமொழியிலோ அவ்வாறொரு தியானப் பாடலைக் காண்டலரிதினும் அரிது. முதலிற் பொருள் காண்பாம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து, நான்கு மறை ஆறு அங்கம் முதலானவற்றைக் கற்றுணர்ந்த கேட்டலில் வல்லுநர்களாகிய சனகர் முதலிய முனிவர்கள் நால்வர்க்கும் வாக்கிற்கு எட்டாத நிறைவாயும் வேதங்களுக்கு அப்பாற்பட்டதாயும் எல்லாமாயும் அல்லதுமாயும் உள்ளதன் உண்மையை உள்ளபடி இருந்து காட்டி சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்து பிறவிக்கட்டாகும் பகையை வெல்வாம்.

அப்பாடல் இது:

**கல்லாரின் புடையமர்ந்து நான்மறையா**
**றங்கமுதற் கற்ற கேள்வி**
**வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த**
**பூரணமாய் மறைக்கப் பாலாய்**
**எல்லாமா யல்லதுமா யிருந்ததனை**
**யிருந்தபடி யிருந்து காட்டிச்**
**சொல்லாமற் சொன்னவரை நினையாம**
**னினைந்துபவத் தொடக்கை வெல்வாம்.**

கூடற் காண்டத்தில் பரசிவ வணக்கமாக அமைந்த பாடல் இது:

"மதுரைத் திருவீதியில் சோமசுந்தரக் கடவுள் திருவடிகள் வருந்த நடந்து வந்தார். வளையல் வனிதையர்க்கு விற்றார், விறகு விற்றார். உண்மையை ஆராய்ந்து அறியும் அறிவுடையோர் சோமசுந்தரக் கடவுளை- ஐம்பூதம் அல்லர். ஐம்பொறிகள் அல்லர், ஐம்புலன்கள் அல்லர், மனமும் புத்தியும் முதலிய அந்தக் கரணங்களின் விகற்பங்களுமல்லர். இவைகள் அல்லாமல் எஞ்சி நின்ற ஆன்மாவுமல்லர் என்பர். பெருநூல்களாகிய வேதங்கள் கிடந்து தடுமாறுதற்குக் காரணமாகிய வஞ்சவெளி என்று விரித்துரைப்பர். பாடலைப் படித்துப் பாருங்கள்:

**"பூதங்க ளல்ல பொறியல்ல வேறு புலனல்ல வுள்ள மதியின்**
**வேதங்க ளல்ல வினையன்றி நின்ற பிறிதல்ல வென்று பெருநூல்**
**வேதங்கி டந்து தடுமாறும் வஞ்ச வெளியென்ப கூடல் மறுகிற்**
**பாதங்க ணோவ வளையிந்த ணாதி பகர்வாரை யாயு மவரே"**

விருத்தகுமார பாலகரான படலத்தில் பார்ப்பதிபாகர் கௌரியினுடைய இல்லத்திற்கு விருத்தராக வந்தார். குமாரராக மாறினார். பின்னர் கௌரியின் மடியில் பாலகராகத் தவழ்ந்தார். பிள்ளைப் பேறில்லாதவர்களும் பேராசை கொள்ளும் படியாக அமைந்த பாடல் அது. முதலில் பாடற் பொருளைக் காட்டுதும்:

"அனைத்து உயிர்களையும் அளித்தும் காத்தும் அழிப்பவன் எம் ஐயன். அப்பெருமானின் பாதங்களில் எழுதிக் காட்டொணாத வேதச் சிலம்புகள் 'கலீர் கலீர்' என்று கர்ச்சிக்கின்றன. அன்பர்களுடைய நெஞ்சம் என்னும் நீரோடையில் மலர்ந்து சிவானந்தத் தேன் ததும்பி வழியும், தெய்வீகத் தன்மை திகழும் தாமரை மலர்போன்ற திருவடி, அத்திருவடித் தாமரை எல்லோருடைய வணக்கத்திற்கும் உரியன. அத்திருவடியின் பெருவிரலை வாயில் வைத்துச் சுவைக்கின்றார். மைதீட்டிய கண்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்முத்துக்கள் அரும்புகின்றன. வாயினைத் திறந்து குழந்தை பொருமி விம்மி வெதும்பி அழுகின்றது. அக்குழந்தை அணையாக விரித்த ஆடையில் கிடந்தது. இனிச் செய்யுளைச் செப்பிப் பாருங்கள்.

**"எழுதரிய மறைச்சிலம்பு கிடந்துபுறத் தலம்ப வன்ப**
**ரிதய மென்னுஞ்**
**செழுமலரோ டையின் மலர்ந்து சிவானந்தத் தேன்ததும்பு**
**தெய்வக் கஞ்சத்**
**தொழுதகுசிற் றடிப்பெரிய விரல்சுவைத்து மைக்கணீர்**
**துளும்ப வாய்விட்**
**டழுதணையா டையிற் கிடந்தா னனைத்துயிரு மீன்றுகாத்**
**தழிக்கு மப்பன்"**

சிற்சத்திக்கு நற்பொருள் சுமக்கும் ஒரு அற்புதமான பாடல் இது.

**"திருமகள் வலக்கண் வாக்கின் சேயிழை யிடக்கண் ஞானப்**
**பெருமக ளுதற்க ணாகப் பெற்றுவான் செல்வங் கல்வி**
**அருமைவீ டளிப்பாள் யாவ ளவளுயிர்த் துணைவன் காண**
**ஒருமுலை மறைந்து நாணி யொசிந்தபூங் கொம்பி னின்றாள்"**

இவ்வாறான ஆயிரம் ஆயிரம் அற்புதமான பாடல்களைத் திருவிளையாடற் புராணத்தில் படித்து இன்புறலாம். அத் தெய்வீகப் பாடல்களால் உருவாக்கப் பெற்ற திருவிளையாடற் புராணத்தைப் படிப்பதாலும் படிக்கக் கேட்பதனாலும் புத்தி நல்வழியை நாடும். பத்தி பரவசமாக வளரும், முத்தி சித்திக்கும், சித்திகள் கைவரப் பெறும். உலகப் பித்துப் பின் தள்ளப்படும். கடவுளிடத்தில் அன்புப் பித்து அரும்பும், உள்ளத்தில் பண்புப் பயிர் செழித்து வளர்ந்தோங்கும்.

கற்பன கற்பவையில் திருவிளையாடற் புராணத்திற்கும் ஓர் இடம் கொடுத்து வாழ்வை வெறும் பாழாக்காமல் வளமாக்கத் திருவருள் துணை நிற்பதாக.

**எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படுகின்றாயே!**
**நிகழ்காலத்தைப் பற்றி அறியாமல் இருக்கின்றாயே!**
**நிகழ்காலத்தைக் கவனி, போதும் - எதிர்காலம்**
**தன்னைத் தானே கவனித்துக்கொள்ளும்.**

- ரமண மகரிஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்-9



# கந்தபுராண சிறுவர் அமுதம்

-மாதாஜி

## 26. திருச்செந்தூரை அடைந்தார் முருகப் பெருமான்

தாரகாசுரனையும் கிரௌஞ்ச மலையும் அழிந்தமை கண்டு அசுரகூட்டம் அழுதது. அமர கூட்டம் ஆனந்தக் கூத்தாடியது.

அதன் பின்னர் முருகப்பெருமான் தேவகிரியில் தங்கினார். பின்னர் சூரபதுமனைச் சங்கரிப்பதற்காக தேவர்களும் சேனைகளும் புடைசூழத் தெற்கு நோக்கிப் புறப்பட்டார்.

இடையில் உள்ள திருக்கேதாரம் காசி திருப்பதம் பழனி, திருவேங்கடம் இவ்வாறு பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு திருச்செய் நல்லூரை அடைந்தார். பின்னர் தேவாசிரியனை அழைத்து அழகிய கோயில் அமைக்கச் செய்து அதில் வீற்றிருந்தார் முருகப்பெருமான்.

அசுரர்களுக்குப் பயந்து இந்திரன் இந்திராணியுடன் சீர்காழியில் தவம் செய்யும் போது இந்திராணியின் ஆபரணங்களை வனதேவதையிடம் அடைக்கலமாகக் கொடுத்திருந்தான். கிரௌஞ்ச மலையுடன் தாரகாசுரனும் அழிந்த பின்னர் வனதேவதை இந்திரனிடம் அந்த அடைக்கலப் பொருளாகிய ஆபரணங்களை அளித்தார்.

இந்திராணியின் அணிகலன்களைக் கண்ட இந்திரனுக்குக் காமநோய் ஏற்பட்டது. காமம் என்பது சிற்றின்பமாகும். முருகப்பெருமான் இருக்கின்ற புனிதமான இடத்தில் இவ்வாறான இழிவு எண்ணங்கள் தகாதல்லவா? அதனால் இந்திரன் முதலியோர் சுப்பிரமணியக் கடவுளை நெருங்கிப் பிரார்த்தித்தார்கள்.

இந்திரன் உள் நோக்கம் கந்தவேள் அறிந்தார் இதனால் கந்தவேள் இந்திரன் முதலான தேவர்களை நோக்கிச் சிவபெருமானைப் பூசிக்க வேண்டும் அதற்கான ஆயத்தங்களைச் செய்யுங்கள் என்று பணித்தார்.

முருகனின் பணிப்பு இந்திரனின் புன்மையான சிந்தனைகளை நிறுத்திப் புனிதமான நற்பணிகளில் தொடர்பு படுத்தியது. இந்திரன் முதலான தேவர்கள் எல்லோரும், சிவனின் சிவபூசைக்குரிய புனித தீர்த்தம் முதலான மலர்கள், அபிடேகப் பொருட்கள் அர்ச்சனைக்குரிய பொருட்கள் நிவேதனப் பொருட்கள் யாவும் சேகரித்துச் சரணவணபவனிடம் ஒப்படைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமான் வேதங்களிற் கூறப்பட்டபடி ஆகம விதிப்படி முறையாகச் சிவபூசை செய்தார். பூசை நிறைவேறியது சிவபெருமான் உமாதேவியாருடன் முருகப் பெருமானுக்குத் தரிசனம் தந்தார்.

முருகப்பெருமானுடன் தேவர்கள் முதலாக இலட்சக் கணக்கான வீரர்கள் பூதப்படைகள் சேனைகள் யாவரும் தரிசித்தார்கள்.

பின்னர் சிவபெருமான் தனது மைந்தரை நோக்கி, உன்வழிபாட்டுக்கு மிக மகிழ்ந்தோம். இதனைப் பெறுவாய் என்று கூறி உலகம் முழுவதும் ஒரு நொடியில் அழிக்கக் கூடிய சர்வசங்காரப் படையென்னும் உருத்திரபாசுபாதப் படையை அருளினார். மைந்தனே இப்படை என்னிடம் தோன்றியது. யாருக்கும் கிட்டாத இப்படை உனக்கே உரியது. இப்படை அளவற்ற படைகளை அழித்து விடும் என்று திருவாய் மலர்ந்து விட்டு மறைந்தார்.

இதன் பின்னர் கந்தவேள் முதலாக இந்திரன் முதலான தேவர்கள் பூதப்படைகள் தமிழ்நாட்டிலுள்ள திருவிடை மருதூர் முதலாகப் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருச்செந்தூரை அடைந்தனர். இங்கும் ஓர் கோயில் அமைக்கச் சொல்லி அதனில் வீற்றிருந்தார்.

முருகப்பெருமானைச் சூழத் தேவர்கள் இருந்தார்கள். அப்போது முருகப் பெருமான் அசுரர்களின் வரலாறுகளைப் புதிதாக அறிய விரும்புவது போல இந்திரனை நோக்கிக் கூறினார். இந்திரன் வியாழ பகவானை அன்புடன் பிரார்த்தித்தான்.

வியாழபகவான் அசுரரின் வரலாறும் தேவர்களின் இடர்பாடுகளையும் விளக்கமாகக் கூறத் தொடங்கினார்.

## 27. பழம் நீ

கந்தபுராணத்தில் முருகப்பெருமான் பழனியாண்டவராகிய கதைவரவில்லை. முருகப்பெருமான் பழனி ஆண்டவராக வந்தமையால் பல தத்துவங்களை அதில் தங்கியுள்ளன. எனவே நாம் இடையில் இக்கதையின் சுவையையும் தத்துவங்களையும் அறிய வேண்டுமல்லவா?

சிவபெருமான், உமாதேவி, முருகன், பிள்ளையார் ஆகியோர் திருக்கயிலைமலையில் இருந்தார்கள். பெரும் உண்மையும், நன்மையும் விளைவிக்கும் நாரதமுனிவர் அதிசய மாம்பழமொன்றைச் சிவபெருமான் திருவடியில் கொண்டு வந்து வைத்தார்.

' இந்த மாங்கனியை உலகம் முழுவதையும் சுற்றி வருபவர் தமக்கு அளிப்போமென திருவாய் மலர்ந்தருளினார். உலகம் பூவுலகம் மட்டுமன்று அதலம் விதலம், கதலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாதலம், தராதலம், இராசதலம், பாதலம், என்னும் ஏழு உலகங்களையும் சுற்றி ஒரு நொடியில் வரவேண்டும். அவை மட்டும் அல்ல இன்னும் பல உலகங்கள் உண்டு எனச் சிவன் கூறினார்.

சூரியன் காலையில் உதிக்கு முன், சூரியனின் பொற்கதிர்கள் வானத்தைத் தொட்டுப் பரவுவதை நாம் காண்கின்றோம் அல்லவா? அதுபோலவே, ஞான சூரியராகிய முருகப்பெருமானின் கருணைக் கதிரானது ஒரு நொடியில் கூறப்படுகின்ற எல்லா உலகையும் சுற்றி எம்பெருமானின் இருக்கைக்கு வந்தார்.

சிவனே உலகைப் படைத்தவர் சிவன் வேறு, உலகம் வேறு அல்ல, அம்மை அப்பரே எல்லா உலகமும் ஆவர், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமல்லவா? இதனால் விநாயகப் பெருமான் சிவனுமையை வலம் வந்து கனியைப் பெற்றுவிட்டார். முருகப்பெருமான் இக்காட்சியைக் கண்டார்.

நெடுநாளாக உலக நிலையாமை உலக மக்களுக்கு உணர்த்த வேண்டுமென முருகப்பெருமான் பாலனாக இருக்கும் போது நினைந்தார். இப்போது சந்தர்ப்பம் கூடியது. இதனால், தமக்குக் கனி கிடைக்காமையால் சினம் கொண்டவர் போலத் துறவியாகி, தனது ஆபரணங்கள் பெற்றோர் எல்லோரையும் நீங்கினார். தமிழ் வளர்த்த மதுரையம்பதிக்கு அருகிலுள்ள மலையுச்சியில் தவக்கோலத்தில் எழுந்தருளி நின்றார்.

உமாதேவி சகிதமாகச் சிவபெருமான் முருகனிடம் சென்றார். பழமா உனக்கா வேண்டும். ஆனந்தச்சாறு நிறைந்த தவப்பழம் நீயே அன்றோ? தத்துவச் சாறு நிறைந்த தவப்பழம் நீயே அன்றோ? அனுபூதி வேண்டி அருந்தவம் இயற்றுவோருடைய சாதனைகளின் பலனாக ஞானப் பழமாக விளங்கும் உன்னையன்றி வேறு பழமும் உண்டோ? பழம் நீ?" என்றார். இதனால் முருகன் இருந்த மலைக்கு பழனிமலை என்று நாமம் உண்டாயிற்று. அன்று தொடக்கம் பழனிமலை செல்பவர்கள் அறம் பொருள் இன்பம் வீடு ஆகியவற்றை இன்று வரை பெற்று வருகின்றார்கள்.

இதன் தத்துவம் என்னவென்று பார்ப்போம். சிவன் என்ற ஒன்றினுள் எல்லா வற்றையும் சிவத்தைக் காணும் தன்மை அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய், அணுவுக்குள் ஆண்டவன் வியாபித்திருக்கின்றான். எல்லாப் பொருள்களிலும் மறைந்திருக்கின்றான். அவனே அகிலாண்ட கோடியெல்லாம் தங்கும் படிக்கு அதாவது எல்லாப் பொருள்களும் தன்னுள் தங்குமாறு விளங்குகின்றான். உலகப் பொருட்கள் யாவற்றிலும் சிவன் இருக்கின்றான். சிவனுக்குள் உலகப்பொருட்கள் தங்கியுள்ளன.

இதனை உணர்த்த விநாயகப் பெருமான், சிவனையும் சக்தியையும் வலம்வர, முருகப்பெருமான் உலகை வலம் வந்தார்.

தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விருந்து

# வைத்தியரின் தருமம்

அருட்சகோதரி யதீஸ்வரி

அன்பான பிள்ளைகளே!

அன்பு வாழ்த்து!

எப்படி இருக்கிறீர்கள்? சுகம் தானே? நல்லது இன்று மகாத்மா காந்தித் தாத்தா வைப்பற்றி ஒரு கதை கேட்கிறீர்களா?

அக்டோபர் இரண்டாம் திகதி காந்தி பிறந்த திகதி. மிகப்பெரிய ஆங்கில சாம்ராஜ்யத்துக்கு எதிராகச் சத்தியம், அகிம்சை, ஒத்துழையாமை என்ற நன்நெறிகளை ஆயுதமாகப் பயன்படுத்தி, பாரத நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தவர் மகாத்மா காந்தி அடிகள்.

அகிம்சைப் போராட்டங்களில் அவருக்குப் பாரத மக்கள் அனைவருமே துணை நின்றார்கள். அவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டார்கள் என்றால் பொருந்தும்.

காந்தி சமர்மதி ஆஸ்ரமத்தில் இருந்தபோது அவருடன் பலதொண்டர்கள் சேர்ந்திருந்தார்கள். அவரது மனப்பாங்குக்கு ஏற்பத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவரது விருப்பப்படி கிராமங்களிலும், சேரிப்புறங்களிலும் சென்று தன்னலம் கருதாது தொண்டு புரிந்தார்கள். இப்படியான தொண்டர்களில் மிகநல்ல மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சிறந்த கல்விமான்கள் பலர் இருந்தார்கள்.

ஒருமுறை ஆஸ்ரமத்திற்குச் சற்றுத் தொலைவில் இருந்த கிராமத்தில் ஒரு பாட்டிக்கு வைசூரிநோய் வந்தது. வைசூரி என்பது அம்மை நோய்களிலேயே மிகவும் கொடியது. அது இப்போது இந்தியாவிலோ வேறு எங்குமோ இல்லை. ஒழிக்கப்பட்டு விட்டது. ஆனால், காந்தி காலத்தில் வைசூரி பெரியம்மை, கொலரா போன்ற நோய்கள் இந்தியாவில் பெருமளவில் பரவுவதுண்டு.

இப்போ வைசூரி நோய் பீடித்த பாட்டி ஒருவர் கவனிப்பார் யாருமின்றி அழுதுகொண்டு இருக்கிறார் அந்தச் செய்தி காந்திஜி காதுக்கு எட்டியது. உடனே; அவர் தம்முடனிருந்த வைத்தியர் ஒருவரைப் பார்த்து,

“உடனடியாக அந்தப் பாட்டியிடம் போ. வேப்பம் இலையை அரைத்து மோரில் கலந்து அவரைக் குடிக்கப்பண்ணு” என்று கூறி அனுப்பினார். வைத்தியர் பாட்டியைப் போய் பார்த்தார். ஆறுதல் கூறினார். வேப்பம் இலையைப் பறித்து அரைத்தார். அதை பாட்டியிடம் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாட்டி, இதை மோரில் கலந்து குடி. நான் நாளை வருகிறேன்" என்று சொல்லிவிட்டு ஆஸ்ரமத்திற்குத் திரும்பி வந்தார்கள்.

"அந்தப் பாட்டிக்கு வேப்பிலை அரைத்து எவ்வளவு மோரில் கலந்து கொடுத்தாய்?" என்று காந்திஜி கேட்டார். வைத்தியர் விழித்தார். தான் வேப்பிலையை அரைத்துக் கொடுத்துவிட்டு வந்ததைத் தெரிவித்தார். காந்திஜிக்கு மிகவும் கவலையாய் விட்டது.

"நீ மோரில் கலந்து அதைக் கொடுத்து விட்டல்லவா வந்திருக்க வேண்டும்! என்ன படிப்பு படித்தாய் மேல் நாட்டிலே? நம் நாட்டு ஏழைத்தாய்க்கு எங்காவது மோர் வாங்கி, அதிலே அரைத்த வேப்பிலையைக் கலந்து கொடுக்கத் தோன்றவில்லையா உனக்கு? அவளிடம் காசு இருக்குமா மோர் வாங்க? வைசூரியில் கிடக்கும் அவள் மோருக்கு எங்கே போவாள்? நீயல்லவா கிராமத்து அயலவரிடம் மோர் வாங்கி அவளுக்குக் கொடுத்து விட்டிருக்க வேண்டும்? அதைச் செய்யாமல் அந்த மூதாட்டியை வேதனையில் கதறிக்கதறி அழ விட்டு விட்டு வந்துவிட்டாயே? இங்கே என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து இருந்து என்ன புண்ணியம்?"

வைத்தியர் உடனே அந்தப்பாட்டியிடம் போனார் உரிய முறையில் தாமே பாட்டிக்கு எல்லாம் செய்தார். காந்தி கூறினார், "மருத்துவனுடைய தர்மம் தொண்டு புரிவதுதான் மருந்தின் பெயரை எழுதிக் கொடுப்பதோ, பத்தியச் சாப்பாடு சாப்பிடச் சொல்வதோ அல்ல, நிச்சயமாய் நோயாளி பூரண குணமடைகிற வரையில் பொறுப்பு மருத்துவனுக்குத்தான் உண்டு!"

பிள்ளைகளே! நாம் ஒவ்வொருவரும் நமது பொறுப்பைச் சரியாக உணர்ந்து அதன்படி நடப்பது தான் உண்மையான தர்மம்.


## சிவபூமி கண்தானச் சபை

**தானங்களில் சிறந்த தானமான கண்தானத்தைச் செய்ய முன்வாருங்கள் உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்துக்கு ஒப்புதல் தாருங்கள்.**

தொடர்புகளுக்கு:

**ஆறுதிருமுருகன்**
தொலைபேசி
021-222-6550

கண்வைத்திய நிபுணர்கள்:
**DR. ச. குகதாசன்** 021-222-3645
**DR. சிவந்தா** 021-222-3149
யாழ். போதனா வைத்தியசாலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய வாழ்க்கையின் முக்கிய அம்சம்

பண்டிதை
சத்தியதேவி
துரைசிங்கம்

சமயம், மூன்று பகுதிகளையுடையது. அவை, தத்துவங்கள், கிரியைகள், அனுபவம் என்பன. உள்ளத்திற் படிமுறையான அன்பு முதிர்ச்சியேற்பட்டு இறையனுபவமாக விளைவதே சமய வாழ்வின் முடிந்த குறிக்கோளாகும். இறையனுபவமாகிய கடவுட் காட்சியையெய்துவதற்கு மனத்தூய்மை இன்றியமையாதது. கண்ணாடியில் ஒரு பொருளைப் பார்ப்பதற்கு கண்ணாடி மிகப்பரிசுத்தமாய் இருக்க வேண்டியது போல, உள்ளத்திற் பரம்பொருளைக் காண்பதற்கு உள்ளம் மிகப் பரிசுத்தமாயிருத்தல் வேண்டும்.

**தத்துவங்கள்:**

உள்ளத்தூய்மையாலும், கடவுட் காட்சியாலும் அனுபூதிமான்களாற் கண்டறியப்பட்ட உண்மைகளே சமய தத்துவங்கள். சமயதத்துவங்களைப்பற்றிய உணர்வு வலியுறவும், நடைமுறை வாழ்க்கையானது அவ்வுணர்வின் வழிபட்டுச் செம்மையுடன் மிளிரவும், உள்ளத்தின் அழுக்கைப் போக்கவும் உபகாரமாயிருப்பன கருமங்கள். கருமங்கள் கிரியைகள் எனவும் படும். சமய அறிவும் சமயக்கிரியைகளும் இலட்சியங்களல்ல. கருவிகளே, இவற்றின் மூலம் உள்ளத் தூய்மை பெற்றுக் கடவுட் காட்சியை எய்துதலே இலட்சியமாகும்.

உலகிலுள்ள எல்லா மதங்களும் தத்துவங்களையும், கிரியைகளையும் அனுபவங்களையும் பெற்றிருக்கின்றன எனினும், சைவ சமயத்தில் நாம் இவற்றைத் தெளிவாகவும், சிறப்பாகவும் பெற்றிருக்கின்றோமென்பதற்கையமில்லை.

**கிரியைகள்:**

அனுபூதிமான்களால் அலசியாராய்ந்து வடித்துத் தரப்பட்ட சிறந்த தத்துவஞானம் நமக்குக் கிடைத்தருக்கிறது. நவீன விஞ்ஞானிகளுங் கேட்டு வியப்படையத்தக்க உண்மைக் கொள்கைகள் சைவசித்தாந்தமாக மலர்ந்துள்ளன. தமிழகத்தின் பேரரசர்களும் பெருமக்களும் ஏராளமான திருக்கோயில்களையமைத்துத் தந்திருக்கிறார்கள். திருக்கோயில்களிலும் ஏனைய இடங்களிலும் சமயத்தின் பெயரால் நடைபெறும் கிரியைகள் எண்ணிறந்தன. பிறந்த நாள் முதல் இறக்கு நாள் வரை நாம் பலவித கிரியைகளுக்கு உட்படுத்தப்படுகிறோம். இவையனைத்துக்கும் மேலாக, அரும்பெரும் முது சொத்துக்களான திருமுறைகள் நமக்குக் கிடைத்தன. அருளாளர்கள் தாம் பெற்ற இறையனுபவ முதிர்ச்சியை அவற்றின் மூலம் வெளிப்படுத்தினார்கள். நெஞ்சுருக்கி என்புருக்கும் இனிமை வாய்ந்த திருமுறைகளைப் படித்து அன்பினை வளர்க்கும் வாய்ப்பு நமக்குண்டு.

**தத்துவங்களையும் கிரியைகளையும், மந்திரங்களையும் அருள் வாக்குகளையும்** கோயில்களையும் தீர்த்தங்களையும் அன்றாடம் பயன்படுத்தும் வாய்ப்பைப்பெற்ற நாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை முறைப்படி பயன்படுத்துகிறோமா? அவற்றைப் பயன்படுத்தியதன் மூலம் நமது உள்ளத்திற் சிறிதேனும் அசைவுண்டாயிற்றா? கல்நெஞ்சம் சிறிதாவது கனிந்துள்ளதா? அக்கனிவு நடத்தையிலும் பேச்சிலும் வெளிப்படுகின்றதா? என்ற வினாக்கள் பிரதானமானவை; நம்மை நாமே கேட்கவேண்டியவை. இவற்றுக்குத் திருப்திகரமான பதில் கிடைக்கும் பொழுதுதான் நமது சமய வாழ்வு வளர்ச்சியுறுகின்றதென்பது கருத்து.

## இலகுவான வழி:

திருமுருகாற்றுப் படையில் ஓரழகிய பகுதியுண்டு. முருகப்பெருமானையடைய வேண்டுமென்ற அவாவுடன் சென்ற ஓரடியாரை, அப்பெருமானிடம் ஆற்றுப்படுத்தினார். ஆசிரியர்.

**"சேவடி படருஞ் செம்மலுள்ள மொடு**
**நலம்புரி கொள்கைப் புலம் புரிந்துறையுஞ்**
**செலவு நீ நயத்தினையாயிற் பலவுடன்**
**நன்னர் நெஞ்சத்து இன்னசைவாய்ப்ப**
**இன்னே பெறுதி நீ முன்னியவினையே"**

என்னும் பகுதியில்

முருகப்பெருமானையடைவதற்குரிய சுலபமான வழியை அவர் விளக்குகின்றார் "முருகனையடைய வேண்டுமாயின், அவனுடைய சேவடிகளிற் பொருந்தியிருந்து அவனையே தியானிக்குந் தலைமைப்பாடுடைய உள்ளம் வேண்டும்; பலபிறவிகளில் நன்மையே செய்துவந்த காரணத்தால், ஞானத்தை விரும்பிப், புலன்களை வென்று அவன் திருவடிக்கீழ்ச் சென்று வாழும் வாழ்வே பெருவாழ்வென எண்ணி அதனை நயத்தல் வேண்டும். அங்ஙனம் நயக்கும் நீ அப்பேற்றையடைதல் கடினமென்றஞ்சாதே; பல உடன் நன்னர் நெஞ்சத்து, அதாவது பலவாய அழுக்குகளை வெறுத்தொதுக்கிய நல்ல சுத்தமான மனத்தின் கண்ணே இனிய விருப்பத்தை மேற்கொண்டால் அவ்விருப்பம் நன்கு நிறைவேறும் நல்ல நெஞ்சம் வாய்த்து, அதில் இனிய விருப்பமுஞ் சேர்ந்துவிட்டால், நீ கருதிய முருகனுடைய திருவடியை இக்கணமேயடைந்து விடுவாய்" என்பது நக்கீரர் பெருமானின் கூற்று. முருகப்பெருமானையடைவதற்குரிய தகுதி, "நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்த்தல்" என்ற கருத்து சமய வாழ்க்கையின் முக்கிய அம்சம், உள்ளத்தைத் தூய்மை செய்தலே என்பதை வலியுறுத்துகின்றது.

மேலும், மணிவாசகப் பெருமான் திருவெம்பாவையில் "சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை" என்றதும் சிந்திக்கத்தக்கது. சித்தத்தில் அழகுடையவர், மனத்தின்கண் அன்புத் தூய்மையுமுடையோர், நமது சிவனைப் பாடாமலிருப்பார்களா என்பது, அழகிய சித்தத்தில் சிவ வெளிப்பாடு தானேயுண்டாகு மென்பதை விளக்குகின்றது. மனத்துக் கண்மாசினையகற்றாது, தத்துவஞான நூல்களைப் படிப்பதாலோ கிரியைகளைச் செய்வதாலோ பெரும் பயனுண்டாகாது. இதனாலேயே வள்ளுவப் பெருந்தகை, அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற"** என்று கூறினார்.

ஒருவன் தன் மனத்தின் கண் மாசில்லாதவனாயிருக்கக் கடவன். அதுவே அறமாவது. மனமாசு நீக்காது செய்யும் பிறசெயல்களையெல்லாம் வெறும் ஆரவார நீர்மையை உடையனவே என்பது வள்ளுவர் கருத்து. ஒருவர் செய்யும் கருமங்களின் பெருமை, அக்கருமங்களின் நீள, அகல ஆழங்களிலிருந்து கணிக்கப்படமாட்டாது. அக்கருமத்தை அவர் எப்படிப்பட்ட நோக்குடன் செய்கின்றார் என்பதிலிருந்தே கணிக்கப்படும். தக்கன், இராவணன், சூரன் ஆகியோர் பெரிய கல்விமான்களாயும், பலசாலிகளாயும், சிறந்த கரும வீரர்களாயும் இருந்த போதிலும், மனத்தூய்மையின்றி அகந்தையுடன் அவர்கள் செயலாற்றியதால் அவர்களின் செயல்கள் இறைவனுக்குகந்ததாயிருக்கவில்லை.

**செம்மனச்செல்வி:**

பாண்டி நாட்டிலே வாழ்ந்த வந்தியென்னுந்தவ மூதாட்டி, இறைவனைத் தனக்குக் கூலியாளராகயெழுந்தருளிவரச் செய்தவர். இறைவனுக்குப்பிட்டினையிட்ட பாக்கியம் பெற்றவர். "பிட்டிடும் நற்றவமுடையாள்" எனத் திருவாதவூரராற் புகழப் பெற்றவர். இத்தனை பெருமைக்கும் அவரிடமிருந்த தகுதி "செம்மனச் செல்வி" யாக இருந்தமையே. கூலியாளராக வந்தவர் சிவபெருமானே என்பதை அவர் சிறிதும் அறியார். எனினும், அணையையடைப்பதற்காக, எளிமையான தோற்றத்துடன் வந்த அக் கூலியாளரைக் கண்டதும், தம்மகனைக் கண்டவர் போல் மனங்குழைந்து, வேலைக்குச் செல்லுமுன்னே வயிறார உண்ணும்படி உதிர்ந்த பிட்டு முழுவதையும் கொடுத்துப் பக்தி சிரத்தையுடன் அனுப்பினார். இறைவன் திருவருளாற் பிட்டு முழுவதும் உதிர்ந்து போகவும், தமது வாணிகத்துக்கு நட்டம் வந்ததே என்று சிறிதுஞ் சஞ்சலப்படாது கூலியாளரை மகிழ்வுடன் உண்பித்தார். "தாயுமிலி, தந்தையிலி, தான் தமியன்" ஆகிய இறைவன் தாயன்பைப் பருகுவதற்கு வந்த குழந்தைபோல் நடித்து, அணைகட்டாது விளையாடிய பொழுதும் அவர் சிறிதேனும் வெறுப்புக் கொள்ளவில்லை. இங்ஙனம் செம்மை வாய்ந்த தூயமனத்தையுடையமையால் அவ்வம்மையார் இறைவன் திருவருக்காளாயினார்.

**பூசலார் நாயனார்:**

பூசலார் நாயனார் ஏழ்மை காரணமாக இறைவனுக்குக் கற்கோயிலெடுக்க முடியாமல் வருந்தினார். பின்னர், மெய்யன்போடு ஆகமவிதிப்படி ஒரு கோயிலை மனத்திற் கட்டினார். அக்கோயிலில் எம்பெருமானை எழுந்தருளச் செய்வதற்கு முகூர்த்தம் வைத்தார். சோழப்பேரரசரொருவர், கற்கோயிலொன்றைப் பெருஞ் செலவிற் கட்டி, அங்கு இறைவனைப் பிரதிட்டை செய்வதற்கு, பூசலார் குறித்த அதே நாளையே குறித்தார். அன்றிரவு இறைவன் அரசருடைய கனவிற்தோன்றி, முகூர்த்தநாளைத் தள்ளி வைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

**நின்றவூர்ப் பூசலன்பன் நெடிது நாள் நினைந்து செய்த**
**நன்று நீடாலயத்து நாளை நாம் புகுவோம் நீயிங்க்**
**ஒன்றிய செயலை நாளை யொழிந்து பின் கொள்வாயென்று**
**கொன்றைவார் சடையார் தொண்டர்**
**கோயில் கொண்டருளப் போந்தார்.**

என்பது சேக்கிழார் திருவாக்கு. மன்னன் அன்புடன் கட்டிய பெருங்கோயிலுக்கு மேலாக, பூசலார் நாயனாரின் மனக்கோயிலுக்கு இறைவன் முதன்மையளித்தமை, அவர் மனத்தின் பெருந்தூய்மையும் அன்புங் கருதியாகும். ஒருவன் தன் பொருளில் எவ்வளவு தொகையைச் செலவிடுகிறான் என்பதை விட தன் மனத்தின் எவ்வளவு பகுதியை இறைவனுக்கு ஒதுக்கிக் கொடுக்கிறான், அவன் எழுந்தருளியிருக்கக் தகுதியாக்குகிறான் என்பதே பெரியதாகும்.

## வீட்டின் விழுப்பம்:

நம் சமய நூல்களையாராய்ந்து பார்த்தால் துன்பமென்பதும் வீடென்பதும் மன நிலையைப் பொறுத்தே பெரும்பாலும் அமைந்திருப்பதைக் காணலாம்.

**"ஆணவத்தோடத்து விதமானபடி மெய்ஞ்ஞானத்
தானுவினோடத்து விதஞ் சாருநாளெந் நாளோ"**

என்னுந்திருப்பாடலில், உள்ளத்தைத் தூய்மை செய்வதிலேற்படும் புரட்சிகரமான ஒரு மாறுதலே முக்திக்குக் காரணமாகின்றதெனத் தாயுமானவர் வற்புறுத்தினார். உயிரானது ஆணவ அழுக்குடன் இரண்டறக் கலந்து நிற்கும் மனநிலையை மாற்றி, மெய்ஞ்ஞான ஒளிப்பிளம்பாகிய இறைவனுடன் இரண்டறக் கலந்து விடுமானால் அதுவே வீடாகும். தீரர்கள் மிக விரைவில் மனத்தூய்மையைச் சாதித்து வீடுபெற்றுவிட, கோழைகள் கோடானுகோடி பிறவியெடுத்து உழல்வார்கள்.

அன்பும் நீதியுங்கூடிய சாந்தநிலை, பகைமையும் வெறுப்புணர்ச்சியையும் வென்ற வீரம், கோபத்தையும் உலோகத்தையும் கடந்த பெருமை என்பன மனத்தூய்மையின் சின்னங்களாம். சமய வாழ்வில் முன்னேறி இறைவனை நோக்கி நடைபோடுகின்ற அன்பர்களுக்கு இவைகளே அடையாளங்கள். இப்பண்புகளை வளர்த்துவரும் மகான்கள் இறைவனின் தொடர்பை நேரிற் பெறுவர்.

அவர்களுக்கே இறைவன் மென்மேலும், சந்தர்ப்பங்களைக் கொடுத்துப் பரிசோதனை செய்கிறான். கணிதத்திலே தீரனான மாணவனொருவனுக்குக் கடினமான கணக்குகளை மேன்மேலும் கொடுத்துப் பரீட்சிக்கும் கணித ஆசிரியனைப்போல், இறைவனும் தன்னடியவர்களின் மனத்தூய்மையைப் பரீட்சிப்பான். இச் சோதனைகளாற் சாதனையாளன் தனியனாக்கப்படலாம்; ஏழையாக்கப்படலாம்; உறுப்பிலியாக்கப்படலாம் உலகோர் பார்வைக்கு அவன் தோல்வியடைந்தவன் போற்றோன்றலாம். ஆனால் அவனுடைய ஆன்மா வெற்றியீட்டி வளர்ச்சியடைந்து கொண்டே செல்கின்றது. இவ்வெற்றியே சமயத்தின் வெற்றி, ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் சமயம் வெற்றிபெற, நீதி வெற்றிபெற, திருவருள் வெற்றி பெற வழிகாணுதல் வேண்டும்.

## உளத்தூய்மை:

சைவப் பெருவாழ்வு வாழ்ந்த அருளாளர்களின் சரிதைகளைக் கூறவந்த சேக்கிழார் பெருமான், அவர்கள் வரலாறு கூறுமுன், சைவ வாழ்வின் அடித்தளமாவது, மனத் தூய்மையோடு கூடிய நீதிவாழ்வென்று காட்டுதற்குப்போலும், திருநாட்டுச் சிறப்புக் கூறிப் பின்னர் திருநகரமாகிய திருவாரூர்ச் சிறப்புக் கூறும் பொழுது திருவாரூரையாண்ட நீதிமன்னராகிய மனுநீதிகண்ட சோழரின் திருவுளத்தூய்மையைத் தித்திக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பாடல்களிற் தெளித்துத் தந்தனர். மன்னரது திருவுள்ளச் சிறப்பும், அத்திரு வுள்ளத்தைத் தம் சிந்தையிலே சிந்தித்த சேக்கிழார் பெருமானின் சிறப்புஞ் சிந்திக்கற்பாலன.

அரச நீதியை மனிதகுல ஒருமைப்பாட்டில் மாத்திரமன்றி, ஆன்மவர்க்க முழுவதிலும் வைத்துச் சாதித்தவர் மனுநீதிகண்ட சோழர். தம்முயிர் போல் மன்னுயிரெல்லாவற்றையும் மதித்துப் போற்றிக் காத்து வந்த அவருள்ளத்தில் தாம்– பிறர், தம்முடையர் –பிறருடையவர் என்ற வேறுபாடோ, பேதவுணர்ச்சியோ நடுக்கமோ கிடையாது. செம்பொன்னை நிறுக்கும் தராசின் நாக்கைப்போல அவர் உள்ளமும் நேர்மையாகவே சிந்தித்தது. அம்மன்னின் மகன், தேரிலேறித் திருவாரூர் மணிவீதியில் வந்தான். அரச குமாரனே, அவனைச் சூழ்ந்து வந்த மக்களோ தன்னைக் காணாதவகையில் ஒரு ஆண் கன்று –புனிற் றிளங்கன்று – துள்ளிக்கொண்டே அவ்வீதியில் வந்தது.

அக்காட்சியை அகக்கண்ணாற் பார்த்தார் சேக்கிழார் பெருமான். அங்கு வந்தது சாதாரண பசுக்கன்றாகவே அவருக்குத் தோற்றவில்லை. ஒப்பற்ற பெரிய தருமதேவதையானது, சிறிதேனுமிரக்கமின்றி, மனுநீதி கண்ட சோழரின் நடுக்கமற்ற, செம்மையான உள்ளப்பாங்கினைச் சோதனை செய்வதற்கு, உருவந்தாங்கி வெளிவந்தது போன்று அக்கன்று காட்சியளித்தது.

தனிப்பெருந் தருமந்தானோர் தயாவின்றித் தானை மன்னன்
பனிப்பில் சிந்தையினிலுண்மைப் பான்மை சோதித்தாலென்ன
மனித்தர் தன்வரவு காணா வண்ண மோர் வண்ண நல்லான்
புனிற்றிளங் கன்று துள்ளிப் போந்ததம் மறுகினூடே.

கன்று தேர்ச்சில்லிலகப்பட்டிறந்தது; தாய்ப்பசு மன்னருக்கு முறையிட்டது. என்ன அற்புதம்! மனுநீதிகண்ட சோழர் தம் மகனுக்குப் பரிந்து பேசவில்லை. கன்றையிழந்த பசுவுக்காக வாதாடினார். வாய் பேசாப் பிராணியான அப்பசுவாலமர்த்தப்பட்ட வழக்கறிஞர் போலல்லவா பேசினார்.

என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செயவிசைந்தே
அன்னியு னோருயிர் கொன்றா லவனைக் கொல்வேனானாற்
றொன்மனுநூல் தொடை மனுவாற் றுடைப் புண்டதெனும் வார்த்தை
மன்னுலகிற் பெற மொழிந்தீர் மந்திரிகள் வழக்கென்றான்.

இங்ஙனம் வழக்குரைத்த மன்னர், தம்மொரு மகனையிழந்து முறை செய்யத் தீர்மானித்தார். மனுநீதிகண்ட சோழர் உள்ளத் தூய்மையிலும் நீதியிலும், அன்பிலும் தரும தேவதை செய்து பார்த்த பரீட்சையிலே தேறி மேம்பட்டு விட்டார். புலமையுலகமாகிய வேதருலகம், பூமழை பொழிந்து அவ்வீரரை வாழ்த்தியது. இத்தகைய மன்னர்கள் தங்கள் செங்கோன்மையாற் புனிதப்படுத்திய புண்ணிய பூமி.

"மாசிலாத மணிதிகழ் மேனி மேற்
பூசும்நீறுபோல் உள்ளும் புனிதர்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய அறுபத்து மூன்று தனியடியார்களையும் வேறு தொகையடியார்களையும் தந்தது.

**சமய வாழ்வின் உயர் நிலை:**

எந்த நாட்டிலே, ஆட்சியாளர் தத்தம் சொந்த நலன்களைப் பேணுவதற்காக மக்களின் நலனைப் பணையம் வைக்கின்றனரோ, எந்த நாட்டின் கல்விமான்களும், தொண்டு புரிவோரும் தத்தம் குறுகிய அபிமானங்களிலிருந்து மீளமுடியாது தத்தளிக்கின்றனரோ, எங்கு அரசவை தொடக்கம் அங்காடி வீதிவரை பொய்மையும் நீதியீனமும், வன்கண்மையும் மலிந்து கிடக்கின்றனவோ அங்கு மகான்கள் எப்படிப் பிறக்க முடியும்! சமய வாழ்வு மலர்வதாக எப்படிக் கூறமுடியும்.

பேதமற்ற அன்பே இறைவனின் திருவுருவம், அன்புருவான அவனையடைவது நமது குறிக்கோளாயின், நமதுள்ளத்திற் பேதமற்ற அன்பையும் நீதியையும் வளர்த்து அதைத்தூய்மை செய்ய வேண்டும். மனத்தூய்மையைச் சாதிப்பதே சமயவாழ்வின் முக்கிய அம்சமாகும்.

**சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்**
**சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்**
**பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்**
**பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்**
**பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்**
**பிறைபூத்த சடைமௌலிப் பிரானார் தந்த**
**வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்**
**மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.**

**-நாவலர்**

மொழிதான்வழிபாட்டின்மூலதனம்,மொழியின்றேல்மனிதனுக்கு எண்ணும் ஆற்றலே இருக்காது, மொழியுடன் கூடிய வழிபாடும் சொற்களற்ற வழிபாடும், இறைவனிடம் மாந்தரை இணைக்கும் குரலாகும்.

**- சித்தர் பொன்மொழி**

நீங்கள் உங்கள் உடல், மனம் உடமைகள் அனைத்தையும் இறைவனின் தொண்டிற்காகப் பயன் படுத்த வேண்டும். அமைதியாக உட்கார்ந்து கொண்டு வெறுமனே ஜபம் செய்தால் மட்டும் போதாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குமாராலய தீபம்

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, அவர்கள்.**

"குமரன்" என்ற நாமம் முருகப்பெருமானைக் குறிப்பதாகும். அஞ்ஞானத்தைத் போக்குபவன் என்ற பொருளில் இது அமைந்துள்ளது. முருகன் ஆலயங்களில் எல்லாம் கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரத்தில் குமாராலய தீபம் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

முருகப்பெருமானுக்குரிய மூன்று விரதங்களாக கார்த்திகை விரதமும், வெள்ளிக்கிழமை விரதமும், கந்தசஷ்டி விரதமும் சிறப்பாக அனுட்டிக்கப்படுகிறது. இதில் கார்த்திகை விரதம் முதன்மையானதாகும். கார்த்திகை என்பது இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்றாகும். இப்பெயர் பெற்ற கார்த்திகைப் பெண்கள் அறுவர் சரவணப் பொய்கையில் உதித்த முருகப்பெருமானை எடுத்து அணைத்துப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்தனர். சிவபரம்பொருளும் உமையம்மையும் அங்கு சென்று ஆறு வேறு உருவில் அமைந்த முருகக் குழந்தைகளைக் கட்டியணைத்துக் "கந்தன்" என்ற நாமத்துடன் ஓருருவில் அமையவைத்து ஆசீர்வதித்தனர். அப்பொழுது அங்கு காட்சியளித்த கார்த்திகைப் பெண்களை நோக்கி எம்பெருமான் வரமளிக்கின்றார்.

"பெண்களே, நீங்கள் கந்தனைப் போற்றி வளர்த்தீர்கள். அதனால் இவன் உங்கள் மைந்தன் எனும் பெயரால் 'கார்த்திகேயன்' என்று அழைக்கப்படுவான். எவராவது மனமகிழ்வோடு கார்த்திகை நட்சத்திரத்தில் இவனை வழிபாடு செய்வார்களானால் அவர்கள் குறைகள் நிறைவு செய்யப்பட்டு இம்மை, மறுமை, மோட்சம் அனைத்தையும் நல்குவோம்."

இவ்வாறு இறைவனே மொழிந்த மகிமைக்குரியது கார்த்திகை விரதமாகும். ஏழு முனிவர்களுக்குள்ளே உயர்ந்த பதமும் சீரும் சிறப்பும் எய்த ஏற்றதோர் விரதம் ஒன்றை நாரதமுனிவர் கேட்டறிந்தார். ஆறுமுகப்பெருமான் திருவடிகளை வழிபாடு செய்து கார்த்திகை நாள் நோன்பைப் பன்னிரண்டு வருடம் அனுட்டித்தால் எல்லாம் சித்திக்குமென அறிந்த நாரதர் பரணி நாளில் ஒரு பொழுது உண்டு கார்த்திகை நாளில் உபவாசம் இருந்து ரோகிணி நாளில் பாரணம் பண்ணி இவ்விரதத்தை அனுட்டித்தார். அதிகாலை உடுத்த ஆடையோடு நீர் நிலையில் மூழ்கிப் பின்பு தூயவெள்ளாடை அணிந்து அனுட்டானங்களை முடித்து. குருவினுடைய பாதத்தை வணங்கி முருகப்பெருமானுக்கு வழிபாடுகள் செய்து புராணமும் கேட்டு நிற்பதோடு கையினால் தண்ணீரை முகந்து பருகித் தருப்பையில் நித்திரை செய்து மூவகை ஆசைகளையும் போக்கி முருகப்பெருமானிடத்திலே உள்ளத்தால் ஒன்றிவிட வேண்டும். மறுநாள் ரோகிணி நாளில் அதிகாலை சந்தியாவந்தனம் நியமம் முடித்துக் கந்தவேளை வழிபட்டுச் சிவனடியார்களோடு பாரணம் செய்தல் வேண்டும். இவ்வாறாகப் பன்னிரண்டு வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரதத்தை நோற்று நாரதமகாமுனிவர் எல்லா முனிவர்களிலும் பார்க்க ஏற்றமாம் பதத்தைப் பெற்றார். கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரத்திரம் தொடங்கி ஒவ்வொரு மாதமும் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் இவ்விரதத்தை ஒரு மறையோன் நோற்று மநுவாகி உலகாளும் சிறப்புப் பெற்றான். மற்றோர் அந்தணன் நோற்றுத் திரிசங்குபதம் பெற்றார். ஒரு மன்னனும் வேடனும் நோற்று அந்திமான் சந்திமான் என்னும் பெயர்களைத்தாங்கி உலகை ஆட்சி செய்யும் பேறு பெற்றனர்.

இவ்வாறு முருகப்பெருமானை வழிபட்டவர்க்கு அச்சம் இல்லை. பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளும் அச்சமகற்றும் அயில்வேலும் கொண்டு எழுந்தருளி அடியவர்களுக்கு முன்னின்று காக்கும் முழுமுதற் கடவுள் முருகனாவார். அவனுடைய வேலே துணை என்று நம்பி வாழ்வோருக்கு வினை இல்லை. காலனையும் ஆரடா என்று கேட்கும் உறுதி அவர்க்கு உண்டாகும். குமரா சரணம் சரணம் என்று சொல்லிக் கும்பிடக் கிடைத்த இந்நாளில் மாவிளக்கு, நெய்விளக்கு ஏற்றி முருகனுக்கு சண்முக அர்ச்சனை திருவிழா நடாத்தி வழிபடுவோமாக.

உ

## அருள் தந்து எமையாளும் கார்த்திகேயனே

திருமகள் அனையதெய் வானைதன் நாதனே
தீந்தமிழ் தெய்வம் நீயே
திசைதொரும் உயர்ந்தொளிர் மலைகளில் நின்ற
திகழரிய ஞான குருவே
வருதுயர் யாவையும் மாற்றுமருந் தாகியொளிர்
வள்ளலே கந்த வேளே
வானவர் துயர்தீர்க்க என்றுமே எந்தைநுதல்
விழிதந்த இன்ப மலரே
பெருகிடும் துயர்தீர வைத்தமரர் குலம்காத்த
தேவ வேனாதி பதியே
பேதமை நிலைநீங்கி பேசுமுயர் ஞானமொழி
காசினியிற் தந்த குகனே
அருளொளி நல்கிடும் ஆனந்தமயில் வீரா
அழகுவடி வேலன் நீயே
ஆறுமுகம் ஆறிரண்டு விழிகொண்டு எமையாளும்
அப்பனே கார்த்தி கேயா.



கவி ஆக்கம்: சு. குகதேவன்
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருள் நீக்கும் மணிச்சுடர்

**திருமதி சகிதேவி கந்தையா, அவர்கள் U. S. A.**

திருக்கார்த்திகை புனிதத் திருநாள். வாசலை அலகிட்டு மெழுகி பிரமாண்டமான மாக்கோலமிட்டு, நெய் பொதிந்த சிட்டி விளக்குகளை அடுக்கி, அந்தணப் பெண்கள் பதவிசாக மடிகார் கட்டி, யுவதிகள் பட்டுடுத்திப் பூச்சூடி மங்களகரமாகக் காத்திருக்கிறார்கள். எல்லாம் எதற்காக? அருணாசல மலையில் பாரிய கொள்கலனில் 21 தொன் நெய்யிட்டு தயாராக இருக்கும் அன்புத் திரியை சுபநேரத்தில் ஏற்றும் சுடரை வணங்கிவிட்டு தம் வீட்டு விளக்குகளை ஏற்றுவதற்காக! அருணாசல மலைத்தீபம் சுடர்விட எதிரே சில காத தூரத்தில் அமைந்திருக்கும் அருணாசலேஸ்வரர் ஆலயத்திலும் நெய் விளக்குகள் ஏற்றப்பட்டு மின்சார அலை விளக்குப் போட்டியாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன. இவ்விரண்டு திருத்தலங்களுக்கும் சற்றுத் தூரே முக்கோணத்தின் ஒரு கோணமாக அமைந்த ஆசிரமத்திலும் தயாராக மினுங்கும் குத்து விளக்குகள் ஏற்றப்படுகின்றன. இதுதான் ரமணாசிரமம். மலையின் அடிவாரத்தில் சிறு குடிலாக இருந்து பின்காலப் போக்கில் மிக அழகிய, பிரமாண்டமான நிலப்பரப்பைக் கொண்ட நிலையமாக விளங்கும் ரமணாசிரமம், ரமணமகரிஷியென அன்புடன் பலரால் வணங்கப்பட்ட மிகப்புனித மகானின் வதிவிடமாய் 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இருந்து இன்றும் பல்லாயிரம் மக்களுக்கு ஆத்மசாந்தி கொடுக்கும் திருத்தலம்.

சிவனின் 5 முக்கிய திருத்தலங்களில் நினைத்தாலே முத்தி அளிக்கும் திருத்தலம் அருணாசலமலை எழுந்து நிற்கும் திருவண்ணாமலை. இத்தலத்தை பல்கோடி மக்களால் நித்தம் நினைக்க வைத்த பெருமையின், நாளும் வலம் வர வைத்த ஆத்மீக திண்மையின் ஊற்று ரமணமகரிஷியின் அருள் சொரியும் மௌனத் திரு நோக்கா, முகம் பொழி கருணையா இல்லைக் குழந்தையின் குமிண் சிரிப்பா? சொல்லத்தான் மிக வளமான எம் மொழியில் வார்த்தைகள் இல்லை.

மதுரையில் திருச்சுளியில் டிசம்பர் 29, 1879இல் சாதாரண அந்தணக் குடும்பத்தில் பிறந்த வெங்கடராமனுக்கு 17 வயதில் ஒரு பயம் பிடித்தாட்டியது. இறப்பு மனக்குமுறலை உய்துணர ஒரு சிறு அறையில் பூட்டிக் கொண்டு நிலத்தில் ‘உடலை’ கிடத்தி மூச்சை நிறுத்திச் ‘சவமானான்’ அப்பொழுது அந்தச் சிறு வயதில் தெளிவெனும் பேரொளி அவன் உள்ளத்தில் பளிச்சிட்டது. இந்த உடல் வேறு மடிந்து அழியும் தன்மையது. ஆத்மா எங்கும் நிறைந்திருக்கும். பேரொளியின் தன்மையது அழிவற்றது. உடல் எம் கர்மாவைக் கரைக்கும் ஒரு ஏதனம். நான் யார் என்பதை உணர்த்தலே என் கடன். உண்மையை உணர்ந்த வெங்கடராமன் பாடசாலை சென்றாலும் அவன் உள்ளம் அதில் ஒட்டவில்லை. உலக வாழ்வு வெறுத்தது, உணவு எதுவானாலும் கடனுக்குண்டீர். தாய்வழி உறவினர் ஒருவர் அருணாசலத் திருத்தலம் பற்றி இவருக்கு அடிக்கடி கூறுவதுண்டு. என்றும் கண்டிராத இத்தலம் காந்தமென இவரை ஈர்க்க இத்தலத்தைச் சென்றடைய வேண்டுமென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வு பொங்க ஆறு ரூபாவை மாத்திரம் எடுத்துக் கொண்டு திருவண்ணாமலை செல்ல ரயில் ஏறுகின்றான். செலவு போக மிகுந்த 2 ரூபாவை குளத்தில் எறிந்து விட்டு ஒரு நட்சத்திரம் வழிகாட்ட கோவிலுக்குச் செல்கிறார். அங்கு குகை போல் அமைந்த மிகச் சிறிய பாதாளலிங்க அறையில் தன்னை அடைத்துக் கொள்கிறார். பூச்சிகள் கடித்துப் புண்ணானது உடல், வாலிபப் பையன்கள் கல்லெறிந்து துன்புறுத்தினர். உணவு யாராவது எப்பொழுதாவது ஊட்டினால் ஒரு கவளம். செப் 1896-மார்ச் 97 மட்டும் இங்ஙனம் இருந்த இவரை வலுக்கடாயமாக சுப்ரமணியர் சந்நிதியில் விட்டார்கள். சனக்கூட்டம் பிடிக்காத இவர் கோவில் பூங்காவில் இருந்து பின் ஒரு சிறு பிள்ளையாய் கோவிலில் சென்றிருந்தார்.

தாயார் அழகம்மை இவர் இருப்பிடம், திருவண்ணாமலையில் இருப்பது அறிந்து வந்து வரும்படி கெஞ்சியும், மிக அன்புடன் பிறப்பு இறப்பின் உண்மை நோக்கை எடுத்துரைத்து அவரை அனுப்பிவிட்டு, தன் ஆத்ம தாகத்தைத் தணிக்கும் பேரூற்றான அருணாசலத்தைச் சென்றடைந்து பவளக்குன்றில் பின் விருபக்ஷக் குகையில் மௌனஞான நிஷ்டையில் இருந்தார். இருபதே வயதான வெங்கடராமன் ரமணமகரிஷியாய், சுடரும் தீபமாய் திக்கெல்லாம் அருள்ஒளி பரப்ப அடியார் கூட்டம் இவரை வட்டமிட்டு மொய்த்தது.

1922இல் இறந்த தாயை மலையடிவாரத்தில் சமாதி வைத்து அடியார் சிறு கொட்டில் ஒன்றை அமைத்தனர். இதன் மேல் காலப்போக்கில் சிறுலிங்கம் ஸ்தாபிக்கப்பட்டு பின் இன்றைய ரமணாசிரமம் எழுந்தது. ரமணர் மலையில் இருந்து அடிக்கடி தாயார் சமாதிக்கு வருவதுண்டு. 1922 கந்தசாமி என்பவர் மலையின் மேற்பகுதியில் வசதியான ஆச்சிரமமென்று அமைத்து- கந்தாசிரமம்-இவரை அங்கு வந்து தங்கச் செய்தார். திருவண்ணாமலை செல்லும் பாக்கியம் எமக்கு முதுமைப்பருவத்தில் கிட்டியது. கரடுமுரடான மலை உச்சி வெயிலின் உக்கிரமம், மிகப் பிரயத்தனத்துடன் ஏறினோம். என்ன ஆச்சரியம்! வெயிலின் கொடுமையோ ஏறிய களைப்போ கொஞ்சங்கூடத் தெரியவில்லை. சலசலத்தோடும் சிறிய ஓடை, குடை நிழற்றும் பரந்த மாமரம், பெரும் சாந்தி எம்மை மென் பனியாகச் சூழ்ந்து பரவசப்படுத்தியது. எங்கும் கிடைக்காத நிம்மதி இங்குண்டு. மலையில் காலடி வைத்த நாள் முதல் இறுதியில் சோதியாய் அதிற் கலந்த 60 வருட கால எல்லையில் ஒரு நாளாவது அவர் வேறெங்கும் சென்றவர் அல்லர்.

இவர் குருவும், அருணாசலமே. மிக மிகச் சாதாரண எளிய வாழ்க்கை முறை, அடியவர் உடன் இருந்தே உண்பர். எவரைக் கண்டு என்றும் முகம் சுழித்ததில்லை. கோவண உடை, மாமுனிவர்களில் இவர் தனித்து நிற்பவர். சகல சீவராசிகளிடத்தும் இவர் பேரன்பு காட்டியதால் ஆசிரமப் பசு லஷிமி, இவர் மடியில் தலை வைத்துத் தெய்வீகமுற்றது. குரங்குகள் இவரைக் குருவாகக் கொண்டு தம் குறைகளைத் தீர்த்துக் கொண்டன. நொண்டிக் குரங்கு இவர் தோழன். எவரிடமும் என்றும் எதுவும் வேண்டாத இவர், காசைக்கையால் தொடாத இவர், அணில்கள் ஆசைப்பட்ட முந்திரிக் கொட்டைகளை ஒரு முதலாளியைக் கொண்டு வரச்செய்து துண்டுகளாக நறுக்கி கொடுத்து மகிழ்ந்தார்.

இந்தக் குழந்தையுள்ளம் பெருஞானத்தின் இருப்பிடம். இவர் வாழ்ந்த காலப்பகுதியில் இலங்கையில் எம் குருபரன் யோகசுவாமிகளும், பாண்டிச்சேரியில் (வங்காளத்தில் பிறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறையில் இளமையில் சுதந்திரம் காணவிழைந்து பின் பாண்டிச்சேரியில் உண்மை உணர்ந்து மோனத்தவத்திலிருந்து பேரமைதி நிலவும் தியான மண்டபத்தை ஓரிரவில் அமைத்தவர்) அரவிந்தரும் இந்த மிலேனியத்தின் இரண்டாவது மாமனிதனாக, அன்பு அகிம்சை சத்தியம் என்ற நீள்வட்டப் பாதையில் உலகைச் சுழலச் செய்த மகாத்மாகாந்தி. வடஇந்தியாவில் கிரியா யோகத்தின் செல்வர். யோகானந்தா என ஐம்பெரும் குரவர் இவ்வுலகின் உய்வுக்காய் அவதரித்தனர். யோக சுவாமிகள்-ரமணர் சந்திப்பு மௌன புனித கங்கை ஜமுனா சங்கமமாய் அடியூற்றாகப் பரக்கும் சரஸ்வதியாய் பேரன்பும் புரிந்துணர்வும் பரந்த மகா பக்தி நதிப்பிரவாகம்.

காந்தி அடிகள் அன்றைய இந்திய ஜனாதிபதி இராஜேந்திரப் பிரசாத்தை அமைதி வேண்டின் ரமணாசிரமம் போ எனப் பணித்தார். ரமணர் எழுத்திலோ பேச்சிலோ நம்பிக்கையற்றவர். எழுதிய நூல்கள் மிகக் குறைவு. அருணாசல அஷ்டகம், உள்ளது நாற்பது, உபதேச உந்தியார் குருவாசகக் கோவை, என மிகச்சில. மேலை நாட்டவர் போல பிறன்டன், ஒஸ்போன், கொகன் இவருடன் இருந்து எழுதிய உரையாடல்கள் இவர் தத்துவத்தை எடுத்துரைப்பன.

அந்திம காலத்தில் வலக்கையில் பாரிய புண் கொடுமையாக வருத்தியது. முழுங்கால்கள் நடக்க முடியாமல் நொந்தன, 'ஞானிக்கு உடம்பு இருப்பது தெரியாது' எனச் சிரித்துக் கொண்டே அமைதியுற்றார்.

1950 ஏப்ரல் 14, 8-47 மணியில் மிகவும் சுடர்விட்டுப் பிரகாசித்த ஒரு பேரொளி வானில் அமைதியாக வட்டமிட்டு அருணாசல உச்சியில் சென்று கலந்தது. இதைச் சென்னையிற் பலரும், பம்பேயில் ஒரு அடியவரும் தரிசித்து நேரத்தையும் சரிசெய்து உண்மையைப் புரிந்து சோகக் கடலில் மூழ்கினர். மறுநாள் பத்திரிகைகளெல்லாம் தலைப்புச் செய்தியாக வெளியிட்டன.

யாருமறியாது ஆசிகள் வழங்கிய ரமணரை நினைந்து இன்றும் பலர் அண்ணாமலை நிழல் எம்மேல் விழவேண்டுமென விழைவோரும் சத்திய ரமணா நீ எங்கே என உருகுவோரும், அருணாசலனே, அமைதியின் வடிவே எனப்படுபவரும் எங்கும் கிடைக்காத நிம்மதி இங்குண்டு என ரமணாசிரமத்தில் இருப்பவரும் ஒரு பொருள் பொதிந்த மகாசரித்திரம் நினைவு கூரப்படுகிறது.

இந்த மிலேனியத்தின் மாமனிதனாகக் கணிக்கப்பட்ட அல்பேட் ஐன்ஸ்ரீன், பல விஞ்ஞானக் கோட்பாடுகளின் தந்தையின் தாகம் எல்லாக் கோட்பாடுகளும் ஒன்று சேரும் ஒரு ஒருமைக் கோட்பாடு (Unification Theory) இந்த திருஷ்டிந்த பிரபச்சம் (திருவண்ணாமலை) பரம்பொருள் (அண்ணாமலை ஈஸ்வரா, உண்ணாமுலை அம்மை) ஆத்மா (ரமணர்) இம்முக்கோணம் அவர் அவாவிய அருளியல் ஒருமைப்பாடா?

கால எல்லையைக் குறுகத்தறித்து அருணாசலமாக நிமிர்ந்து நிற்கும் ரமணர் என்றும் அணையாத கார்த்திகைத் தீபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 – 11 – 2000 நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்ற

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை நிகழ்வன்று

## கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்கள்

## ஆற்றிய தலைமையுரையிலிருந்து ஒரு பகுதி

இன்றைய நாவலர் விழாவை ஆரம்பிக்கின்றோம். மதிப்பார்ந்த பெருமக்களே, தாய்மார்களே, துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளே, திருவாளர் ஆறு.திருமுருகன் அவர்களே, உங்கள் எல்லோருக்கும் எங்களுடைய பணிவான வணக்கத்தை முதலிலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய தினம் யாழ்ப்பாண மக்களுக்கு எழுச்சியான, நினைவுக்குரிய பயபக்தியான ஒரு புண்ணியதினம். புண்ணிய நாள். நாமெல்லாம் போற்றுநாள் என்று பாடினார்கள் பெரியவர்கள். அத்தகைய ஒரு நல்ல தினத்திலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானுடைய நினைவை எங்கள் உள்ளத்திலே இருத்தி அவருடைய சேவைகளை நாங்கள் எல்லாம் எடுத்துப் பேசி நினைவூட்டுவதற்காக இங்கே வந்து கூடியிருக்கிறோம். நல்லூர் நாவலர் பெருமானுக்கு சிறந்த இடம்,

> "நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேற்
> சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே - எல்லவரும்
> ஏத்து புரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
> ஆத்தனறி வெங்கே யறை"

என்று பாடினார் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள். நல்லை நகர் நாவலர் என்று சொல்லும்போது நல்லூருக்கும் நாவலர் பெருமானுக்கும் இடையிலே உள்ள தொடர்பு, நல்லூரை அவர் மதித்துப் போற்றிய சிறப்பு, வண்ணார்பண்ணைச்சிவன் கோயிலிலே அவர் ஆற்றிய மகிமை ஆகியவற்றை இந்த இடத்திலே நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பின்பற்ற வேண்டும்.

சைவமக்களாக நாம் வீபூதி அணிகின்றோம். சைவசின்னங்களை மதிக்கின்றோம், சிவாலய வழிபாட்டைச் செய்கின்றோம், அது மாத்திரமல்ல சிவனடியார்களை மதித்து குருபூசை எடுத்து வழிபாடு செய்கின்றோம். இந்த அளவிலே எங்களுடைய கடமை முடிந்துவிடவில்லை. எங்களுக்கு இந்த நாட்டிலே இருந்து இந்த மண்ணை வாழ்வித்த பெருமக்களை நாம் அடிக்கடி நினைவு கூரவேண்டும். யாழ்ப்பாணம் என்று சொன்னால் நாவலர் பெருமானுக்கு முதன்மையான இடம். அதே போன்று ஒரு பெரிய இடம் யோகர் சுவாமிகளுக்கும் உண்டு. நாவலர் பெருமானுக்கு உண்டு என்பதை நாங்கள் நினைத்துக்கொள்ள வேண்டும். அத்தகைய பெருமை பெற்ற நாவலர் பெருமானுடைய குருபூசை இன்றைய நாள். பத்திரிகைகள் எல்லாம் கடந்த வாரத்திலேயும், இந்த வாரத்திலேயும் அவருடைய சிறப்பு வரலாறுகளை எல்லாம், சேவைகளையெல்லாம் எடுத்துக்காட்டி வெளியிட்டு இருப்பதை நாங்கள் அறிகின்றோம்.

யாழ்ப்பாணத்து நல்லூரிலே நாவலர் பெருமான் ஒரு செல்வச்சீமானுடைய குடும்பத்திலே அவதரித்தார். அவருக்குச் செல்வத்திற்குக் குறைவில்லை., கல்விக்கு குறைவில்லை, அரசாங்க பதவிக்கு குறைவில்லை ஆனால் அவற்றையெல்லாம் ஒரு பொருட்டாக மதியாமல் சேவைதான் தன்னுடைய இலட்சியம், பிறந்த வாழ்வின் நோக்கம் என உள்ளத்திலே கொண்டு கஞ்சித்தொட்டித் தருமம் முதலாக பல தருமங்களை இந்த மண்ணிலே நடாத்தி வைத்தவர் நாவலர் பெருமான்.

அவருடைய துணிவான போக்கு, சிவ சின்னங்களை மதிக்கின்ற சிறப்பு, பெரியவர்களை, நாயன்மார்களை, சிவனடியார்களை, அதுமாத்திரமல்ல. சமயகுரவர்களை முதன்மையாகப் போற்றுகிற சிறப்பு அனைத்தையும் நாங்கள் "பாலபாடம்" போன்ற அவர் எழுதிய நூல்களிலிருந்து படிக்கின்றோம். இந்த நிலையிலே இன்றைக்கு ஒரு எழுச்சியான நாள். இன்றைக்கு நான் பத்திரிகையைப் பார்த்த போது நாவலர் பெருமானுடைய குருபூசை பல இடங்களில் யாழ்ப்பாணத்திலே இடம்பெறுகின்றது. பரிசளிப்பு விழாக்கள் இடம்பெறுகின்றன. அவருடைய பேச்சுப் போட்டிகள் இடம்பெறுகின்றன. இந்த நிலையிலே சைவ பரிபாலன சபை மாத்திரம் ஒரு காலத்திலே இந்தக் குருபூசையை நடாத்தி நிறைவு கண்டது. இன்றைக்கு யாழ். மண் எங்கும் இக்குருபூசை விழா இடம்பெறுகின்றது. எனவே அவருடைய சேவை, அவர் எமக்கு ஆற்றிய பணி அனைத்தையும் வருடா வருடம் இந்தத் தினத்திலாவது நாம் எல்லோரும் கூடி ஞாபகப்படுத்தி அந்தப்பணிகளில் ஒரு சிறிய அளவிலாவது நாமும் செய்வதற்கு முன்வரவேண்டும்.

நாவலர் பெருமான் சென்ற நூற்றாண்டிலே அவதரித்து இருக்காவிட்டால் விரதங்களைப்பற்றி நாங்கள் அறிந்திருக்கமாட்டோம். சிவ வழிபாட்டைப்பற்றி நாம் அறியமாட்டோம். எல்லாம் சூனியமாகவே மறைந்திருக்கும். அதற்குரிய சூழ்நிலை பற்றி நான் எடுத்துக் கூற வேண்டிய தேவை இல்லை. துணிவான ஒரு மனப்போக்குடனே பீற்றர்பார்சிவல் கூட "மதகுரு" என்று போற்றக்கூடிய ஒரு பெருமையுடனே தகமையுடன் தன்னுடைய பணியை சென்றல் கொலிச்சிலே அதாவது மத்திய கல்லூரியிலே அவர் நடாத்தி வைத்தவர். திருநீறு, உருத்திராட்சம் போன்றவற்றை எல்லாம் தரித்துக்கொண்டு, சிவவேடத்தோடு அங்கு சென்று கல்வி கற்பித்தார். என்பதை நாங்கள் அறிகின்றோம். இவ்வளவு துணிவு அவருக்கு ஏற்பட்டதற்குக் காரணம் அவர் சிவனிடத்திலே வைத்த பக்தி. எதற்கும் சொல்லுவாராம் "சிவனுண்டு பயமில்லை" இந்த வாக்கு நாங்கள் ஒவ்வருவரும் உள்ளத்திலே இருத்த வேண்டிய வாக்கு. 'சிவனுண்டு பயமில்லை; சிவனுண்டு பயமில்லை' என்று நாங்கள் அடிக்கடி சொல்ல வேண்டிய ஒரு வாக்கு. நாவலர் பெருமானாலே அன்றைக்கு அவர் உச்சரித்து தன்னுடைய கடமைகளை 57 ஆண்டுகள் மாத்திரம் செய்து இந்த உலகத்திலே வாழ்ந்து உலகம் போற்றுகின்ற நிலையிலே, சைவமக்கள் போற்றுகின்ற ஒரு நிலையிலே அவர் ஆற்றினார் என்பதை நாங்கள் மறக்கக்கூடாது. கொடிய தொய்வு நோயினால் பீடிக்கப்பட்டிருந்த போதும் அந்த நோயைக் கவனிக்காது தன்னுடைய பணியை மாத்திரம் கவனித்து தான் ஏன் பிறந்தேன் என்பதை உள்ளத்திலேயே கொண்டு தன்னுடைய பிறவியின் குறிக்கோள் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை எடுத்துக்கொண்டு சென்னையிலே, பணி, தென் இந்தியா முழுவதும் பணி, திருவாவடுதுறை ஆதீனத்திலே பணி, யாழ்ப்பாணம் நல்லூரிலே பணி, நாவலர் வித்தியாசாலையிலே பணி என்று எல்லாம் எங்கும் தன்னுடைய பணியை விரித்து நல்லபடி நடாத்தி வைத்தவர் நாவலர் பெருமான்.

இப்படியான ஒரு துணிவான அதாவது நாயன்மார்கள் வரிசையிலே துணிவான போக்குடைய சைவப்பெருமக்களை இன்றைக்கு காணமுடியாமல் இருக்கிறது. கவலை. ஏனைய மதத்தவர்கள் ஆற்றுகின்ற பணியிலே ஒரு சிறிதளவு ஆவது நாம் ஆற்றுகின்றோமா என்பது கேள்விக்குறி. ஏதோ கோயில்களை நடாத்துகின்றோம், திருவிழாக்கள் செய்கின்றோம் பெரும் பொருளைச் செலவு செய்கின்றோம். ஆனால் ஆலயங்களைக்கொண்டு அறம் வளர்ப்பதும் மக்களை நன்னெறிக்கு இட்டுச்செல்வதும், இளம்பிராயத்தினரையெல்லாம் சிவநெறி காட்டி அவர்களை வளர்த்தெடுப்பதும் எங்களுடைய பெருங்கடமை என்பதை நாவலர் பெருமானுடைய குருபூசை தினமாகிய இன்றைய தினத்திலாவது நாங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

எங்களிடம் பணம் இல்லையென்று சொல்லமுடியாது, பலம் இல்லையென்று சொல்லமுடியாது, அறிவு இல்லையென்று சொல்லமுடியாது. ஆனால் நாங்கள் எல்லாவற்றையும் உதாசீனப்படுத்தி ஏதோ கோயில்களும் நாங்களும் இருந்தால் போதும் என்ற நிலையிலே இடத்திற்கு இடம் கோயில் கட்டுவதிலே தான் இன்றைக்கும் முனைகின்றோம். சிறிய சிறிய கோயில், எத்தனையோ இடங்களிலே யாழ்ப்பாணத்திலே மூலை முடுக்கு எல்லாம் கோயில் இன்றைக்கு கட்டப்படுகின்றது. இதனை நாங்கள் நன்கு அறிவோம். கோயில் கட்டுபவர்கள் முதலிலே துர்க்கை அம்மன் கோயிலுக்கு வருவார்கள். பணம் கேட்பார்கள். என்னென்றால் கோயில் கட்டுகிறோம் என்று சொல்வார்கள்.

எங்களுக்கு நல்லூர்ப்பெருமானுடைய கோயில் மற்றும் இங்கே இரக்கின்ற சிவன்கோயில், வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயில், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில், சுன்னாகம் ஐயனார் கோயில் இப்படியான பழமை வாய்ந்த கோயில்களை நாங்கள் நல்லபடி நடாத்தினாலே அதுவே திருப்தியானது. கோயில்களை நடாத்துகின்றகோது கோயிலை மையமாகக்கொண்டு மக்களை வாழ்விக்கவேண்டும். அறம் வளர்க்கும் இடமாக கோயில்கள் அமைய வேண்டும். அந்த நிலையில் தான் கோயில்கள் வாழும்.

இன்றைக்கு ஏன் துர்க்கை அம்மன் கோயில் எழுச்சி பெற்றது என்று சொன்னால் காலத்தினால் மூத்தது அல்ல. காலத்தினால் மூத்த கோயில் அழிந்துவிட்டது. இன்றைக்கு புதுக்கோயில் அமைத்திருக்கின்றோம். அதற்குக் காரணம் அங்கே நடாத்துகின்ற அறச்செயல்கள். இத்தனை பிள்ளைகளையும் நாங்கள் வளர்க்கின்றோம், இத்தனை அன்னையர்களை நாங்கள் பேணுகின்றோம், அவர்கள் அங்கே இருக்கிறார்கள். தங்கி இரக்கிறார்கள். அது மாத்திரமல்லாமல் இன்றும் எத்தனையோ சமூகபணிகளை நாங்கள் ஆற்றுகின்றோம். இந்த நாட்டுப் பாடசாலைகள், இடம்பெயர்ந்த பாடசாலைகள் அத்தனைக்கும் பரிசளிப்பு விழாக்களுக்கு நன்கொடை கொடுப்பவர்கள் எங்களுடைய கோயில் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையிலே பணமும் வந்துகொண்டே இருக்கிறது. பணத்திற்கு குறைவில்லை. பக்திக்கும் குறைவில்லை. அதே நேரத்தில் அறச்செயல்களுக்கும் குறைவில்லை என்பதை உங்களுக்கு அன்பாக தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த நிலையிலே எங்களுடைய கோயில்கள், பெருங் கோயில்கள், பழமையான கோயில்கள் எல்லாம் பணியாற்ற வேண்டும். அந்தக் கோயில்களிலே இருக்கின்ற தர்மகர்த்தா சபையினர் இதனை உன்னிப்பாக நோக்க வேண்டும். இன்றைக்கு நாங்கள் எங்கே போய்க்கொண்டு இருக்கின்றோம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். மக்களின் கவலையைத் தீர்க்கின்ற பணிதான் இன்றைக்கு முக்கியமான பணி.

அன்னம் இல்லாமல் தவிப்பவருக்கு அன்னம் கொடுக்க வேண்டும். அன்னம் பாலிக்கின்ற பணி. ஆடையில்லாமல் தவிப்பவருக்கு ஆடை கொடுக்க வேண்டும். அது மாத்திரம் அல்ல கைம்பெண்கள் என்று சொல்லி கவலையோடு இருப்பவர்களுக்கு ஆறுதல் அளிக்க வேண்டும். இந்த நிலையிலே சமூகப்பணி இன்றைக்கு விரிந்திருக்கின்றது. இதற்கு வழிகாட்டியவர் நாவலர் பெருமான். அவருடைய கஞ்சித்தொட்டித் தருமம் –அது பெரியதொரு எடுத்துக்காட்டு. ஆகவே நல்லைநகர் ஆறுமுகநாவலர் எங்களுக்கு ஆற்றிய தூயசேவை அனைவராலும் நினைவூட்டிக் கொள்ளக் கூடிய பெருஞ்சேவை ஆகும்.

அவர் மறைந்தபோது உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் அழுதார்.

**"ஆரூரன் இல்லைப் புகலியர்கோனில்லை - அப்பனில்லைச்**
**சீரூர மாணிக்கவாசகனில்லைத் திசையளந்த**
**பேரூரு மாறுமுகநா வலனில்லைப் பின்னிங்கியார்**
**நீரூரும் வேனியன் மார்க்கத்தைப் போதிக்கும் நீர்மையரே"**

என்று அழுதார். அந்த நிலையிலே நாங்களும் அழவேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம். அன்றைக்கு எழுந்த அழுகை அல்ல, இன்றைக்கும் இன்றும் மோசமான அழுகைக்கு உட்பட்டிருக்கின்றோம். நாங்கள் . நாடு சீரழிந்து போகிறது. ஒழுக்கம் நிலைகெட்டு இருக்கிறது. பெண்கள் மத்தியிலே ஒழுங்குகள் குறைந்து கொண்டு போகிறது. ஆண்கள் மத்தியிலே கடமைகள் குறைந்து கொண்டு போகிறது. இந்த நிலையிலே நாவலர்பெருமானுடைய குருபூசைத் தினத்திலே சங்கற்பம் எடுப்போம். நாமும் வாழ்ந்து நாட்டையும் வாழவைப்போம். எம்முடைய வீட்டையும் வாழவைப்போம். சமூகத் தொண்டுகளிலே ஈடுபடுவோம் என்ற சங்கற்பத்தோடு நாவலர்குருபூசையை நாங்கள் எல்லோரும் உள்ளத்து சுத்தியோடு மனச்சுத்தியோடு எடுத்து அதன் பிரகாரம் நடந்து கொள்வோம் என்று சங்கற்பம் செய்வோமாக.

✡



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் நீதி வாக்கியங்கள்

☆ இந்தச் சரீரம் நமக்கு கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

☆ இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது, நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

☆ கடவுளையும், அவரை வழிபடும் நெறியையும் அதனால் எய்தும் பலனையும் உலகுக்குப் போதிக்கும் அருள் வடிவாகிய ஆசாரியர் ஒருவரே உன் உயிர்த்துணை, ஆதலால் அவரை ஒரு காலமும் மறவாதே.

☆ ஈசுர பக்தியும் நல்லொழுக்கமும் உள்ள பிதா மாதாக்களை உடமையே பெரும் பாக்கியம்.

☆ தீவிரமாயேனும் மந்தமாயேனும் நல்வினை இன்பத்தையும், தீவினை துன்பத்தையும் வருவிக்கும்.

☆ நன்மை செய்தற்கு சமயம் வாய்க்கும் பொழுது செய்யா தொழிவையாவில் பின் ஒரு காலத்தில் அது வாய்ப்பது அரிது.

☆ சோம்பல் தீமைக்கும் துன்பத்திற்கும் பிறப்பிடம்.

☆ தங்கள் நயத்தின் பொருட்டு மாத்திரமன்றி, பிறர் நயத்தின் பொருட்டும் பிரயாசைப்படுகின்றவர்களே உத்தமர்.

☆ எவ்வளவு அதிக இரகசியமாகச் செய்யப்படும் நன்மைகளையும், முற்றறிவுடைய கடவுள் அறிந்து, பயன் அளிப்பார். பிறர் அறிந்தென்! அறியாதிருந்தென்!

☆ தன் பொருட்டு மாத்திரம் பிரயாசப்படுபவன் அற்ப இன்பத்தை மாத்திரமே அனுபவிப்பான், அவ் அற்ப இன்பமோ மிக இழிந்தது.

☆ அறிவும் அதனால் ஆகிய நற்குண நற்செய்கைகளும் உள்ள சான்றோர்களாலே நன்கு மதிக்கப்படுவதற்கு யோக்கியனாய் இரு.

☆ நீ பிறருக்குச் செய்த உபகாரங்களை நீயே எடுத்துப் புகழ்தல் தக்கது அன்று.

☆ அடக்கம் உடமை பாவியர்களுக்கு சிறந்த ஆபரணம்.

☆ நாம் செல்வத்தையும் உபசரிக்கப்படுதலையும் நம்முடைய பிரீதிக்கு மாறாக இகழ்தல் கூடும் நல்லொழுக்கத்தையோ அப்படி இகழ்தல் கூடாது.

☆ உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம்

☆ இளமையிலே ஒருவன் பழகிய பழக்கம் நன்றேயாயினும், தீதேயாயினும் அதுவே பெரும்பான்மையும் மரண பரியந்தம் அவனைத் தொடரும்.

☆ நமக்கு நல்லொழுக்கமும் புகழும் இன்பமும் வருதல் தவிர்தல்கள் முறையே பெரும்பான்மையும் நமது நற்சார்பு தீச்சார்புகளால் ஆகும்.

தொகுப்பு : செல்வி கிருஸ்சாமி துர்க்காம்பிகை
மானிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org